பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 19 சனிக்கிழமை 05.10.2024 கதிர் 332

## இது ரகசியம் அல்ல!

தமிழ்அரசுக்கட்சியின்வேட்பாளர் தெரிவுக் குழு இன்று காலை வவுனியாவில் கூடுகின்றது. 11 பேர் கொண்ட அந்தக் குழுவில் சிறீதரனும்பங்கேற்கிறார். முதலில் இந்தக் குழுவிற்கு அவரது பெயர் சொல்லப்பட்டபோது இல்லை ☞2

### சின்னத்தை திருடி வெல்லலாம் என கனவு காணும்

# தமிழ் தேசியப் போலிகளை இனங்கண்டு ஒதுக்குங்கள்

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அறைகூவல்

ஒரு சில அரசியற் கட்சிகளினதும் குடிமக்கள் அமைப்புக்களினதும் உழைப்பினால் மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்ட சின்னத்தினைக் கைப்பற்றுவதன் ஊடாக தமிழ் மக்களை தேசமாகத் திரட்டுவதைக் கேலிக்குரியதாக்கிய தமிழ்தேசியபோலிகளை இனங்கண்டு தமிழ் மக்கள் 2024 பொதுத் தேர்தலில்ஒதுக்கவேண்டும்என்றுவலியுறுத்தியுள்ளது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

”தொடர்ந்தும் மக்களையும் உழைத்த தரப்புக்களையும்ஏமாற்றமுயலும்மக்களால் புறக்கணிக்கப்பட்ட இந்த தமிழ்த் தேசியப் போலிகளை மக்கள் இனங்கண்டு ☞2



## முழுமையான 13இன் அவசியம் தொடர்பில் இந்தியா சுட்டிக்காட்டு

### இலங்கைத் தலைவர்களிடம் ஜெய்சங்கர் எடுத்துரைப்பு

தமிழ் மக்கள் உள்ளிட்ட சகல சமூகங்களினதும் சமத்துவம், நீதி , கௌரவம், சமாதானம் ஆகியவற்றுக்கான வேணவாவை அடைய இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தினை முழுமையாகவும் வினைத்திறன் மிக்க வகையிலும் அமுல்படுத்துதல் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை முற்கூட்டியேநடத்துதல் ஆகியவை வழிசமைக்கும் என்று இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் இலங்கை ஆளும் தரப்பிடம் சுட்டிக்காட்டினார். ☞8

## கோட்டாபயவின் செயலரிடம் 3 மணி நேரம் விசாரணை

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டார குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் தனிப்பட்ட இல்லத்துக்குச் செல்லும் வீதியான மிரிஹான பங்கிரி வட்ட வீதியில் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களை தாக்குவதற்கு சிவில் உடை அணிந்தவர்கள் சிலரைத் தூண்டிவிட்டார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பிலான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையிலேயே அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டதோடு, விசாரணையின்போது, குறித்தசம்பவம் சம்பந்தமாக சுமார் மூன்று மணிநேரம் விசாரணைகள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தலில் இருந்து ஒதுங்கினார் ஐ.தே.கவின் பிரதித் தலைவர்

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தனவும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை ஒன்றிணைப்பது தொடர்பில் பல தடவைகள் நீண்டநேரம்கலந்துரையாடிய தலைவரான ருவான் விஜயவர்தன, இதுதொடர்பான பேச்சு தோல்வியடைந்ததன் காரணமாக பொதுத்தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று தீர்மானித்திருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தான் எதிர்வரும் தேர்தலில்போட்டியிடப் ☞8

## திருமலை, அம்பாறையிலும்கூட வீட்டுச் சின்னத்திலேயே போட்டி

### தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு முடிவு

வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தமிழ் அரசுக் கட்சி தனது வீட்டுச் சின்னத்திலேயே போட்டியிடுவது என்று அதன் அரசியல் குழு தீர்மானித்துள்ளது. புதன்கிழமை இரவு 'சூம்ஷ்' மூலம் கூடிய அரசியல் குழுவினர் இந்த முடிவை எடுத்தனர். அம்பாறைமற்றும்திருகோணமலை மாவட்டங்களில் ஏனைய கட்சியினர் விரும்பி முன்வந்தால் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் இடமளிப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த வாரம் வவுனியாவில் கூடிய தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு 2024 பொதுத் தேர்தலில் கட்சியின் வீட்டுச் சின்னத்திலேயே வடக்கு கிழக்கின் அனைத்துமாவட்டங்களிலும் ☞9

## போர்ப் பதற்றத்திற்கு மத்தியிலும் 118 இலங்கையர்கள் இஸ்ரேலுக்கு

போர்ப் பதற்றத்திற்கு மத்தியிலும் 118 இலங்கையர்கள் இஸ்ரேலுக்குத் தொழிலாளர்களாகப்பயணிக்கவுள்ளனர்.

விவசாயத் துறையில் தொழில் வாய்ப்புக்கு தகுதி பெற்ற இந்த 118 போருக்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விமானப் பயணச்சீட்டுகள்வழங்கியுள்ளநிலையில், எதிர்வரும் 9, 10, 12 மற்றும் 13 ஆகிய திகதிகளில் இஸ்ரேல் நாட்டிற்குச் செல்லவுள்ளனர். ☞8

## ஐ.தே.கவுடனான பேச்சு வெற்றியளிக்கவில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

பொதுத் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்வெற்றியளிக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்நளின்பண்டார தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ☞8

## ஒதுங்கினார் பந்துலவும்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று முன்னாள் அமைச்சரவைப்பேச்சாளரும், முன்னாள் போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தனதெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

20 வருடங்களுக்கு மேலாக ஹோமாகம தேர்தல் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்திற்குள் வந்த அவர் பிரதியமைச்சர், அமைச்சரவை அமைச்சர்எனபலபதவிகளை வகித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் மற்றுமொரு பட்டப்படிப்பை மேற்கொள்ளவுள் ☞8

## அடிப்படையற்ற கருத்துகளுக்கு பொதுமக்களே செவிசாய்க்காதீர்

### தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை

பொதுமக்களை தவறாக வழிநடத்தும்வகையிலபரப்பப்படும் அடிப்படையற்ற கருத்துக்களுக்குச் செவிசாய்க்கவேண்டாம் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு பொதுமக்களிடம் கேட்டுள்ளது.

ஆணைக்குழுவின் தீர்மானங்கள் மீது நம்பிக்கை வைத்து செயற்படுமாறு பொதுமக்களிடம் ☞8

## பொது மக்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளை ஒப்படையுங்கள்

### நவம்பர் 7 வரை அரசு காலக்கெடு

உயிர் பாதுகாப்பிற்காக பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து ரக துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை தற்காலிகமாக மீளப் பொறுப்பேற்பதற்கு ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளது.

மீளாய்வின் பின்னர் மீளவும் வழங்குவது என்ற முடிவுடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

துப்பாக்கிகள், அவற்றுக்காக வழங்கப்பட்டுள்ள தோட்டாக்களுடன் நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை கடற்படையின் வெலிசறை வணிக வெடிபொருட்கள் களஞ்சியசாலையில் ஒப்படைக்குமாறு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள அனைவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை ஒப்படைத்ததன் பின்னர் விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டின் பிரதியை பாதுகாப்பு அமைச்சின் பிரதான நுழைவாயிலுக்கு அருகே உருவாக்கப்பட்டுள்ள ☞8

## தேசிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க இதுவே தருணம்

### பிரதமர் ஹரினி தெரிவிப்பு

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி, அபிவிருத்தி மற்றும் தேசிய பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தைத் ஆரம்பிப்பதற்கு தற்போது சிறந்த தருணம் உருவாகியுள்ளதாகத் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். நெறிப்படுத்தப்பட்ட திட்டத்தின்படி செயல்பட வேண்டும் என்பதே புதிய ஆளும்தரப்பின் எதிர்பார்ப்பு எனவும் அவர் குறிப்பிட்டார்.

வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

என்று மறுத்து குருகுலராஜாவைத் தனது பிரதிநிதியாக முன்மொழிந்தவர், பின்னர் குருகுலராஜா அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற காரணத்தைக் காட்டித் தானே இருக்கின்றேன் என்று கூறிவிட்டாராம். அதனால் அவரும் இன்றைய கூட்டத்தில் கலந்துகொள்வார். இந்தக் குழுவில் அவருக்கு ஆதரவாக இருக்கக்கூடியவர்கள் என்று கருதப்படுவோர் ஆக இருவர் மட்டுமே. ஒருவர் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா. மற்றையவர் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் குகதாசன். அவர்கள் இருவரும்கூட எப்போது யார் பக்கம் தடலாடியாகத் திரும்புவார்கள் என்று சொல்ல முடியாது. அதனால் சிறீதரன் இன்றைக்கு அனேகமாகத் தனித் தவில்தான். ஏனெனில் இன்றைய கூட்டத்தில் அவருக்கு வேட்பாளர் நியமனம் வழுங்குவதுதான் பிரதான பேசு பொருளாக இருக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு எடுத்த முடிவுக்கு எதிராக தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் வேட்பாளர் அரியநேத்திரனை முழுமையாக ஆதரித்து அவருக்கு ஆதரவாக பொது மேடை போட்டுப்பேசி கட்சிக்குத் துரோகம் இழைத்தவர் சிறீதரன். அவரை இந்த வேட்பாளர் தெரிவுக் குழுவிற்குள் சேர்த்துக் கொண்டது கட்சியின் மத்திய செயற்குழு செய்த மாபெரும் தவறு. ஆனால் தவிர்க்க முடியாமல் சிறீதரனைவிட கட்சிக்குப் பெரும் -துரோகம் செய்தவரான மாவை சேனாதிராசாவை கட்சித் தலைவர் என்ற முறையில் இந்தக் குழுவிற்குள் சேர்க்க வேண்டியிருந்ததால் சிறீதரனையும் விலக்குவது மத்திய செயற்குழுவிற்கு முடியாத காரியமாகிவிட்டது.

இருந்தாலும் இந்தக் குழுவில் சுமந்திரனுக்கு ஆதரவானவர்களே அதிகம் இருக்கின்றனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்றுகூடச் சொல்லலாம். தாமதமாக மூளை வேலை செய்யும் கட்சித் தலைவருக்கு இந்த விவகாரம் மிகப் பிந்தித்தான் உறைத்திருக்கிறது. அல்லது வேறு யாரோ சொல்லித்தான் அறிய வந்திருக்கிறது. அதனால் தனது கட்சித் தலைவர் என்கிற அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு மத்திய குழு தெரிவு செய்த குழுவைக் கலைத்துவிட்டு வேறு குழுவை நியமிக்க முயற்சி செய்திருக்கிறார். அதற்குச் செயலாளரும் மற்றவர்களும் எதிர்ப்புத் தெரிவிக்கவே குழுவில் மேலும் 5 பேரைத் தலைவர் என்கிற வகையில் தான் நியமிக்கப் போகிறார் என்று பிடிவாதம் பிடித்திருக்கிறார். ஆனால், மத்திய செயற்குழு ஒரு முடிவை எடுத்த பின்னர், நீங்களும் சேர்ந்து அந்த முடிவை எடுத்த பின்னர் தன்னிச்சையாக நீங்கள் அதை மாற்ற அனுமதிக்க முடியாது, அப்படிச் செய்வது கட்சிக் கட்டுக்கோப்புக்குச் சீர்குலைவு என்று செயலாளரும் மற்றவர்களும் காட்டமாக எதிர்த்து நின்றதை அடுத்து இந்த நிலை.

தலைவர் மேலும் 5 பேரைக் குழுவில் சேர்க்க முனைந்ததற்குக் காரணம் குழுவில் ஏற்கனவே சிறீதரன் பக்கம் இருக்கக்கூடியவர்கள் என்று கருதப்படும் 3 எண்ணிக்கையை 8 ஆக அதிகரித்து சுமந்திரன் தரப்புடன் சமப்படுத்தத்தான். அந்த முயற்சி தோல்வியில் முடிந்திருக்கும் நிலையில் தலைவர் இன்று யார் பக்கம் சாய்வார், எந்த முடிவை எடுப்பார் என்றெல்லாம் சொல்லமுடியாது.

இன்றைய கூட்டத்தில் சிறீதரன் மற்றும் கிழக்கில் சிறிநேசன் ஆகியோருக்கு வேட்பாளர் நியமனம் வழுங்கக்கூடாது என்று சுமந்திரன் நேரடியாகவே எதிர்ப்பார் என்று தெரிகிறது. கட்சிக்கு எதிராக கருத்துச் சொன்னார்கள், கட்சி முடிவை எதிர்த்தார்கள் என்ற காரணத்திற்காக முன்னர் சிவகரன் மற்றும் அனந்தி ஆகியோரை கட்சியைவிட்டு வெளியேற்ற முனைந்து நின்றவர் சுமந்திரன். அவர்களைவிட மோசமாக கட்சிக்கு வெளிப்படையாகவே துரோகமிழைத்தவர்களுக்கு எதிராகவும் அவர் அந்த நிலைப்பாட்டை எடுக்காமல் இருந்தால் அவர் அரசியல் இலாபகங்களுக்காகச் செயற்படுகின்றார் என்று அர்த்தப்படும். அதுவும் தவிர இப்போது சாராயக் கடை அனுமதி தொடர்பிலான விவகாரத்திலும் அவர் ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார். அப்படி சாராயக்கடை அனுமதிக்கு சிபாரிசு செய்த -முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலை வெளியிடும்படி அவர் ஜனாதிபதியிடமே வலியுறுத்தியிருக்கிறார். அப்படி அந்தப் பட்டியல் வெளிவந்தால் சொந்தக் காசில் கட்சியே தனக்குச் சூனியம் வைக்கும் நிலை ஏற்படும் என்பதும் அவருக்குத் தெரியும். எனவே அவர் சிறீதரனின் வேட்புமனுவுக்கு எதிராக தீர்க்கமாக நிற்பார் என்றே நினைக்கின்றேன்.

கூட்டத்தில் சிறீதரனைப் பார்த்து இந்த விவரங்களை எல்லாம் தெரிவித்து நீங்களாகவே தேர்தலில் இருந்து ஒதுங்கிக்கொள்ளுங்கள் என்று அவர் முகத்துக் நேரே கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படி நடக்கவில்லை என்றால், சுமந்திரனின் கோரிக்கையை மத்திய செயற்குழு ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், 25 ஆயிரம் தொடக்கம் 30 ஆயிரம் வாக்குகளை இழக்கவேண்டும் என்று அஞ்சி சிறீதரனுக்கு வேட்புமனு கொடுக்க மத்திய செயற்குழு மறுத்தால், கட்சியின் முடிவை மீறி யார் வேண்டுமானாலும் செயற்படலாம் என்று கட்சியே அனுமதி கொடுத்தது போன்றாகிவிடும். அப்படியொரு நிலை ஏற்பட்டால் கட்சியின் முடிவுக்கு எதிராக, சராயக்கடை அனுமதி விவகாரத்தில் சுமந்திரனே சிறீதரனுக்கு எதிராக மேடைகளில் முழுங்கும் நிலை ஏற்பட்டாலும் அதைக் கட்சி கேள்வி கேட்க முடியாது. கட்சித் தலைமைத் தேர்தலில் வெற்றிபெற சுமந்திரனைத் துரோகி என்று பறைசாற்றிய சிறீதரன் அணியினரை தேர்தல் மேடையில் இளைஞர்களையும் குடும்பங்களையும் சீரழித்த சமூகத் துரோகி என்று சுமந்திரன் பரப்புரை செய்தால் யாரால் தடுக்க முடியும்? கடைசியில் அதுவும் தேர்தலில் வாக்குகளை இழக்க வைக்கத்தான் வழி வகுக்கும். இந்த மோதலால் சிறிதனை வேட்பாளராக்காவிட்டால் இழக்கப்படும் வாக்குகள் அளவிற்கு அவரை வேட்பாளராக்குவதாலும் வாக்குகள் இழக்கப்படும்.

இத்தகைய சர்ச்சைகளுக்கு மத்தியில்தான் இன்றைய கூட்டம் நடக்கும். இதற்கிடையில் இன்றைய தினமே அனைத்து மாவட்டங்களினதும் வேட்பாளர் பட்டியல்களும் இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்க முடியாது. சிறீதரனாக ஒதுங்காவிட்டால் அந்தப் பஞ்சாயத்திற்கே நீண்ட நேரம் எடுக்கும் என்பதால் இந்தக் குழு மீண்டும் ஓரிரு நாளில் கூடித்தான் வேட்பாளர் பட்டியல்களை இறுதி செய்யவேண்டியிருக்கும்.

இதற்கிடையில் மன்னாரில் தான் இந்தத் தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்று அறிவித்த சார்ள்ஸ் நிர்மலநாதன் மீண்டும் வேட்பாளராவதற்குத் தயாராகிவிட்டார். செய்தியாளர்களைக் கூட்டி பகிரங்கமாக தேர்தலில் இருந்து ஒதுங்குகின்றேன் என்றவர், கட்சியின் மாவட்டக் கிளையினரைக் கூட்டி வைத்து அவர்கள் வலியுறுத்துவதாகக் காட்டிக்கொண்டு மீண்டும் போட்டியிடத் தயாராகிவிட்டார். இந்தக் ---கூட்டத்தில் சுமந்திரனும் இருந்துள்ளார். சார்ள்ஸ் அவரிடம், கட்சியின் மன்னார் உறுப்பினர்களின் விருப்பப்படிதான் வேட்புமனு தாக்கல் செய்தால் அதனைச் சுமந்திரன் எதிர்ப்பாரா என்று கேட்டுள்ளார். அதற்கு இது வேட்பாளர்களை இறுதி செய்யும் கூட்டம் இல்லைத்தானே, சனிக்கிழமை வேட்பாளர் தெரிவுக் கூட்டத்தில் அதனைப் பார்த்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

ஆனால், வன்னி மாவட்டத்தில் சார்ள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண முன்னாள் பிரதம செயலாளர் அ.பத்திநாதன், இளம் சட்டத்தரணி செல்வராஜா டினேசன் ஆகியோருக்கு இடம் உறுதியாக்கப்பட்டிருப்பதாக ஊடகங்களுக்குச் செய்திகள் வழுங்கப்பட்டுள்ளன. இன்றைய ஊடகங்களில் இந்தச் செய்தியைப் பார்க்க முடியும் என்று நினைக்கின்றேன். உண்மையில் கட்சியின் முடிவை எதிர்த்து சார்ள்ஸ் நிர்மலநாதன் மேடை ஏறவில்லையே தவிர, கட்சியின் முடிவை ஏற்றுச் செயற்படுத்தவுமில்லை. சஜித்தை ஆதரித்து செயற்படுமாறு கட்சியின் செயலாளர் கடிதம் அனுப்பிய பின்னரும் மன்னார் மாவட்டத்தில் இருந்த கட்சியினரையும் சேர்த்து வைத்துக்கொண்டு ரணிலைச் சந்தித்து அவருக்கு ஆதரவு தெரிவித்தவர் சார்ள்ஸ்.

தனக்கு ஆதரவு தெரிவித்து தன்னைக் கொழும்பில் சந்தித்த சிறி ரெலோ கட்சியினர் மற்றும் புளொட்டின் லிங்கநாதன் ஆகியோரிடம் ரணில் விக்கிரமசிங்க சார்ள்ஸ் மற்றும் அடைக்கலநாதன் ஆகியோர் வன்னியில் தன்னை ஆதரிப்பர் என்று தெரிவித்திருக்கிறார். "அடைக்கலநாதனும் சாள்ஸும் எனக்காக வேலை செய்வார்கள், கூட்டங்கள் நடத்துவார்கள் என்று உறுதியளித்துள்ளார்கள். அதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நீங்கள் சென்று அவர்களுடன் அவர்களுடன் சேர்ந்து வேலை செய்யுங்கள் போதும்'' என்று ரணில் தெரிவித்திருக்கின்றார். ஆக மொத்தத்தில் சாள்ஸ் கட்சி முடிவுக்கு எதிராக ரணிலோடு ஒரு இருட்டு ஒப்பந்தத்தில் இருந்திருக்கலாம் என்று சந்தேகிக்க இடமுண்டு. அதனால்தான் அவர் சஜித்தை ஆதரித்து கட்சிக்காக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இப்படிப்பட்ட நிலையில் அவருக்கும் தேர்தலில் இடம் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். அவரது கோரிக்கையும் இன்று சர்ச்சைக்குள்ளாகும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்;
# மாயமான அறிக்கை குறித்து உடனடி விசாரணை நடத்துக
### நாமல் ராஜபக்ச வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை உள்ளடக்கிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை காணாமற்போனமை தொடர்பில் ஆளும் தரப்பு உடன் விசாரணை நடத்தவேண்டும் என நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அறிக்கை காணாமற்போனமை தொடர்பில் தனது கவலையை வெளிப்படுத்திய ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச, தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' கணக்கில் நேற்றுப் பதிவிட்டிருந்தார்.

உயிர்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை காணாமல் போயுள்ளதாக வெளியான செய்திகள் உண்மையென்றால் ஆணைக்குழு உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு அதனைக் கண்டறிந்து பொது மக்களுக்கு வெளியிட வேண்டும் எனவும் அவர் அந்தக் குறிப்பில் வலியுறுத்தியுள்ளார்.

# தேசிய குற்ற விசாரணைகளின் நிலைமை குறித்துக் கலந்தாய்வு
### பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு செயலர் தலைமையில்

நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய தேசிய மட்ட குற்றங்கள், மோசடிகள் மற்றும் முக்கியமான குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு விசாரணைகளின் முன்னேற்றத்தை அறிந்து கொள்வதற்காக கலந்தாய்வுக் கூட்டம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன தலைமையில் பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பொலிஸ் உயர் அதிகாரிகள் குழு மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவும் இந்தக் கலந்தாய்வில் இணைந்து கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகள், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள விசாரணைகள், அவை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள், அதில் அரசியல் தலையீடு உள்ளதா என்பது தொடர்பில் இந்தக் கலந்தாய்வின்போது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அநாவசியமாக பிற்போடப்பட்ட விசாரணைகள் குறித்தும், புதிதாக ஆரம்பிக்கப்பட வேண்டிய விசாரணைகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. விசாரணைகள் தாமதமானால் அது எதனால் என்பது குறித்தும் கலந்தாலோசித்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பல முக்கிய விசாரணைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், கலந்துரையாடல் தொடர்பான விடயங்கள் குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள வேண்டும். இது போன்ற தமிழ்த் தேசியப் போலிகள் மக்களிடையே தமிழர் தேசத் திரட்சியின் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதோடு, கூட்டுவேட்கையினையும், கூட்டு மனோபலத்தையும் தகர்த்தெறிந்து தென்னிலங்கைக் கட்சிகளை நோக்கி மக்களை நகர்த்துவதற்கு தமிழ்த் தேசியத்தின் பெயரால் முயன்று கொண்டிருக்கின்றன" என்று அந்த அறிக்கை குற்றஞ்சாட்டுகின்றது.

''சில தமிழ்த் தேசியப் போலிகள் அரச தலைவர் தேர்தலில் ஒரு பக்கம் தென்னிலங்கைக் கட்சிகளுடன் இருட்டு ஒப்பந்தமும், மறுபக்கம் தமிழ் மக்களின் வாக்குகளிற்காக பொதுக் கட்டமைப்பின் வேட்பாளர் தரப்புடன் இணைந்து ஒப்பந்தமும் செய்துகொண்டிருந்தமையினையும் யாரும் அறியாமலில்லை. அதற்காக உழைக்காத தரப்புக்கள் அரசியல் சூழ்ச்சிகளினால் இன்று தமிழ் வேட்பாளரின் சின்னத்தைக் கைப்பற்றுவதனூடாக நாடாளுமன்றத் தேர்தலில் மக்களாணை பெறக் பகற்கனவு காணுகின்றன. பொதுக் கட்டமைப்பு வேட்பாளரின் சின்னம் தற்பொழுது அவரை நிறுத்திய தரப்புக்களுடையதல்ல, வேறு கட்சிகளினுடையது என்பதனை அனைவரிடமும் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டும்" என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

**புத்துயிர் பெறட்டும் தமிழர் தேசம்**

சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தல் முடிவுகள் வாக்களிப்பின் வெவ்வேறு பரிமாணங்களையும், மக்களின் அரசியற் சிந்தனைகளையும் வெளிப்படுத்தியுள்ளது. தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்து முன்னெடுக்கப்பட்ட தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் வேட்பாளர் மற்றும் தேர்தல் புறக்கணிப்பு என்பன கனிசமானளவு தமிழ் மக்களை அணி திரட்டுவதில் முன்நகர்ந்துள்ளமை தமிழ் அரசியற் பரப்பில் புதிய திருப்பம். கடும்போக்கு சிங்கள-பௌத்த பேரினவாதத்தை வெளிப்படுத்தி தெற்கில் வெல்லக் கூடியவராக கணிக்கப்படும் பேரினவாதத்தின் முகவர் வென்றுவிடக் கூடாதென்ற அச்ச நிலையானது பிறிதொரு பேரினவாத முகவரிற்கு வாக்களிப்பதற்கு மக்களை வழிநடத்தியிருப்பதும் வெள்ளிடைமலை.

சிங்கள-பௌத்த பேரினவாதம் முழுவீச்சில் செயற்படுவதற்கான வாய்ப்புக்களைப் பொருளாதார நெருக்கடி தற்காலிகமாக மட்டுப்படுத்தியுள்ள நிலையில் சிங்கள மக்கள் மாற்றமொன்றினை எதிர்பார்த்து வாக்களித்துள்ளனர். எனினும் சிங்கள மக்களின் வாக்களிப்பு முறைக்கு நேர்மாறாக வாக்களித்ததன் மூலம் எம்மிடையே நிலவுவது பொருளாதார நெருக்கடி மட்டுமல்ல என்பதை தமிழ் மக்கள் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர்.

15 ஆண்டுகளாக தலைமைத்துவ வெற்றிடம் நிலவும் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் தெற்கில் ஏற்பட்டுள்ள ஊழலற்ற ஆட்சி, இளையோர்களின் அரசியற் பங்கேற்பு உள்ளிட்டவைகளின் தாக்கம் உணரப்படாமலும் இல்லை.

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய பட்டியலுக்காக களமிறங்கும் கட்சிகள் ஒதுங்குமாறு கோரிக்கை

## கிழக்கு தமிழர் ஒன்றியம் விடுப்பு




தேர்தலில் களமிறங்க உள்ளஏனையஇதரகட்சிகள் தேசிய பட்டியலுக்காக களம் இறக்கப்படும் இந்த கட்சிகள் தயவு செய்து எங்களுடைய மாவட்டத்தின் நிலையை கருத்தில்கொண்டுதேர்தலில் இருந்துஒதுங்கிக்கொள்வதே மக்களுக்குச் செய்யும் கைங்கரியம் என கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் செயலாளரும் ஊடகப் பேச்சாளரும் ஓய்வு பெற்ற பிரதிகல்விபணிப்பாளருமான குணாளன்தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

பல்வேறு இன்னல்களை தொடர்ந்து அனுபவித்து வருகின்ற மக்களுடைய இன்னல்களை கருத்தில் கொண்டு இந்த விடையத்தைதை பதிவிட விரும்புவதாகவும் கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் செயலாளர் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த தேர்தலில் தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டு தேசிய பட்டியல் ஊடாக ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டது தற்போதைய நிலை. ஆனால் கடந்த காலத்தில் அவ்வாறில்லாமல் அனைவரும் ஒன்றிணைந்து பிரதிநிதி ஒன்றை தெரிவு செய்தது வரலாறு. ஆனால் தற்போது அம்பாறை மாவட்டத்தை இலக்கு வைத்து பல்வேறு குழுக்கள் கட்சிகள் எல்லாம் வாக்குப்பதிவுகளை பெறுவதற்காக முனைந்து கொண்டிருக்கிறார்கள்.

இதனை தீர்மானிப்பது வாக்காளர் பெருமக்களே இன்று தேசிய கட்சிகளிடையே பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன. இதுஎங்களுடைய மக்களை வெறுப்புக்குள்ளாக்கும் நிலைக்கு ஆக்கப்பட்டுள்ளது. முதலில் ஒரு தமிழ் பேசும் ஒருவர் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட வேண்டும். எனவே இந்த தேர்தலில் அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை.

தமிழரசு கட்சி உட்பட பிரிந்து கிடக்கும் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு கூரையின்கீழ் செயற்பட வேண்டும். இவ்வாறு செயல்பட முன் வருவதால் நிச்சயமாக பிரதேசத்தில் தமிழர் பிரதிநிதிதுவம் பாதுகாக்கப்படும்.

தேர்தல் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. காரணம் கடந்த ஜனாதிபதி தேர்தல் இதற்கான ஒரு பாடமாக அமைந்திருந்தது.

மேலும் பொதுமக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் பொருத்தமானவர் யாராக இருந்தாலும் ஒரு கட்சியில் உள்ள ஒருவரை தெரிவு செய்வது இந்த பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதற்கான ஒரு செயற்பாடு எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

மக்களை அடிமைகளை ஆக்கி வேறு ஆசா வார்த்தைகளை காட்டி அவர்களை திசை திருப்பி விட வேண்டாம் ஏனைய தேசிய கட்சிகளிடம் நாங்கள் கேட்டுக் கொள்வது மேலும் சிறிய கட்சிகளும் உள்ளே புகுந்து இருக்கும் நிலையை குழப்பி விட வேண்டாம் எனவும் கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஏனைய பெரும் கட்சிகள் தமிழ் மக்களுக்கு எப்போதும் ஒன்று கூடுவார்கள் என்ற சிந்தனை அனைவருக்கும் இருக்கின்றது என்பதோடு அது ஒரே கூரையின் கீழ் என்பதுதான் நிச்சயம் சாத்தியமாகும். அதே நேரம் யார் பலம் உள்ளவர் யார் வேட்பாளர் என்பதை தெரிந்து நிறுத்துங்கள் எனவும் மக்கள் நிச்சயமாக தெரிவு செய்வார்கள் அவ்வாறு மக்கள் தெரிவு செய்வதற்கு உங்களுடைய தெரிவு மிக முக்கியம் என்பது எங்களுடைய பணிவான வேண்டுகோள் எனவும் கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் செயலாளர் குணாளன் தெரிவித்திருந்தார். (05)

# வாகன தொழில்நுட்பம் கற்கும் மாணவன் ஒருவன் தான் பயிற்றுவிக்கும் பஸ்ஸில் நசுங்கி உயிரிப்பு

ஆனமடுவவில் வாகன தொழில்நுட்பம் கற்கும் மாணவன் ஒருவன் தான் பயிற்றுவிக்கும் பஸ்ஸில் நசுங்கி உயிரிழந்துள்ளார் என ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனமடுவ தொழிநுட்பக் கல்லூரியில் வாகன தொழிநுட்ப கற்கை நெறியை பயின்று கொண்டிருந்த மாணவர் ஒருவர் பயிற்சிக்கு பயன்படுத்தப்பட்ட அதே பஸ்ஸில் மோதியதில் பலத்த காயமடைந்து ஆனமடுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார் என ஆனமடுவ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

ஆனமடுவ மஹா உஸ்வெள பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய சாமிக்க பிரபாத் பெர்னாண்டோ என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

குறித்த பஸ் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் வைத்து பழுது நீக்கும் (வயரிங்) பணிக்காக வேறொரு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட நிலையில், திடீரென மாணவன் அதில் ஏறி வழுக்கி, பயணித்த அதே பஸ்ஸின் அடியில் விழுந்துள்ளார்.

இதில் பலத்த காயமடைந்த மாணவன் ஆனமடுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் தன் கைகளால் பழுதுபார்த்த அதே பஸ்ஸில் அடித்துச் செல்லப்பட்டு உயிருடன் விடைபெற நேர்ந்தது நெஞ்சை உலுக்கும் சம்பவம்.

விபத்து தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், பஸ் ஆனமடுவ பொலிஸாரால் பொறுப்பேற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆனமடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கும் வேலைத் திட்டம் ஆரம்பம்

## அரச தகவல் திணைக்களம் அறிவிப்பு

நாடளாவிய ரீதியில் பிறப்புச் சான்றிதழ் இல்லாத குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழ் வழங்கும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத குழந்தைகளை இனங்கண்டு அவர்களுக்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் சான்றிதழ்களை வழங்குவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

பிரதேச செயலக மட்டத்தில் கடமையாற்றும் சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர்களால் இந்த மாதம் முழுவதும் இச்செயற்பாடு மேற்கொள்ளப்படும்.

பிறப்புச்சான்றிதழ் இல்லாமல் கணிசமான எண்ணிக்கையிலான குழந்தைகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ்களுக்கு ஒக்ரோபர் மாதம் முழுவதும் கட்டணம் அறவிடப்பட மாட்டாது என அரசாங்க தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# அரசின் டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவதாக கேட்ஸ் மன்றம் உறுதி



கேட்ஸ் மன்றத்தின் சுயாதீன ஆலோசகர் சந்தித்த சமரநாயக்க வியாழக்கிழமை காலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

கேட்ஸ் மன்றத்தால் இலங்கையில் செயற்படுத்தப்படும் விவசாய மேம்படுத்துதல், பாடசாலை மதிய உணவு வழங்குதல் உள்ளிட்ட குழந்தைகளின் போஷாக்கை மேம்படுத்துதல், அரச மற்றும் தனியார் துறைகளில் மனித வளங்களை மேம்படுத்துதல், கால்நடை வளர்ப்பு, காலநிலை மாற்றம் போன்ற துறைகள் சார்ந்த திட்டங்கள் குறித்து இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

புதிய அரசாங்கத்தின் ஊழலுக்கு எதிரான கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு டிஜிற்றல் மயமாக்கலின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய சந்தித்த சமரநாயக்க, அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்களுக்கு நிதி, தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை ஆதரவை வழங்குவதற்கு கேட்ஸ் மன்றம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரொஷான் கமகேயும் கலந்துகொண்டார்.

(05)

# 1,400 வெளிநாட்டு சிகரட்டுகளுடன் கொழும்பில் ஒருவர் கைதாகினார்

கொழும்பு துறைமுக நகரத்திற்கு அருகில் உள்ள பிரதேசத்தில் வெளிநாட்டு சிகரட்டுகளுடன் சந்தேக நபரொருவர் மத்திய கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை, பல்லேயாய பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 1,400 வெளிநாட்டு சிகரட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காகக் கொழும்பு துறைமுக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.(05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழ் தேசியப் போலிகளைப் புரிந்துகொள்ளல்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஒரு காரசாரமான அறிக்கையை விடுத்திருக்கின்றது. தமிழ்த் தேசியப் போலிகளை இனம் கண்டு அவர்களை மக்கள் விலக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது. தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் இயங்கி, அந்தக் கட்டமைப்பால் அரசுத் தலைவர் தேர்தலில் நிறுத்தப்பட்டிருந்த சுயேச்சை வேட்பாளர் அரியநேத்திரனின் சின்னத்தை அதே கட்டமைப்புக்குள் இருந்த தமிழ் மக்கள் பொதுச் சபையின் விருபத்தையும் மீறிக் கைப்பற்றிக் கொண்ட 5 கட்சிகளை மறைமுகமாகச் சாடியே மாணவர்களின் இந்த அறிக்கை வந்திருக்கின்றது.

தமிழ் தேசியப் பொதுக் கட்டமைப்பிற்கு ஆதரவளித்த தரப்புக்களில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் ஒன்று. பொதுக் கட்டமைப்புக்குள் இவர்களுக்கு ஒரு பிரதிநித்துவம் வழங்குவதற்கான இணக்கப்பாடும் இருந்தது. என்றாலும் பொதுக் கட்டமைப்புக் காணாமற்போகும் வரைக்கும் அந்த வாய்ப்பை ஒன்றியம் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இந்த நிலையில் ஒன்றியத்தின் அறிக்கை பொதுச் சபையினரின் குரலாகவே வெளிவந்திருக்கிறது என்று கருதவே இடமுண்டு.

நீண்ட அந்த அறிக்கையில் 2024 பொதுத் தேர்தலையொட்டிய சிலஎதிர்பார்ப்புக்கள்அல்லதுகோரிக்கைகளும்இடம்பெற்றுள்ளன. கடைசி நேரத்தில் வந்திருப்பதனால் இந்தக் கோரிக்கைகளில் எல்லாவற்றையும் கட்சிகளால் நடைமுறைப்படுத்த முடியுமா என்பது கேள்விக்குரியது. ஆனால் அவற்றில் சிலவற்றை ஏற்கனவே நடைமுறைப்படுத்த தமிழ் அரசுக் கட்சி நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஏனைய கட்சிகளும் அவற்றில் சில கோரிக்கைகளைப் பின்பற்றக்கூடும்.

ஆனாலும் அந்த நீண்ட அறிக்கையின் முதன்மையான பேசு பொருளாக இருப்பது தமிழ்த் தேசத் திரட்சியும் தமிழ் தேசியப் போலிகளை இனங் காணலும்தான். ’’தமிழ் வேட்பாளரை நிறுத்துவதற்குஉடன்பட்டதரப்புக்களில்குடிமக்கள்சமூகங்களினதும் ஏனையகட்சிகளினதும்உடன்பாடுகள்ஏதுமின்றிதங்களிற்கிருந்த அறம்சார் கடப்பாட்டினை மீறி மக்களால் புறக்கணிக்கப்பட்ட அரசியற்கட்சிகளின்கூட்டணியொன்றுதேர்தல்ஆணைக்குழுவில் பொது வேட்பாளரின் சின்னத்தினைக் கோரிப் பெற்றுள்ளது. குடிமக்கள் சமூகங்களின் கூட்டிணைவிற்குள் செயற்படும் சிலர் தங்கள் சிந்தனைகளோடு குடிமக்கள் சமூகத்தினரை நகர்த்திச் செல்ல முயற்சிப்பது வருந்தத்தக்கது. தொடர்ந்தும் மக்களை மடையர்கள் என்றெண்ணிச் செயலாற்றும் இதுபோன்ற அறம் பிழைத்தவர்களை மக்கள் நாங்கள் தோலுரித்தல் அவசியமாகும்.

தமிழ் மக்களை தேசமாகத் திரட்டுவதிலும் ஒரு சில அரசியற் கட்சிகளினதும் குடிமக்கள் அமைப்புக்களினதும் உழைப்பினால் மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்ட சின்னத்தினைக் கைப்பற்றுவதன் ஊடாக மக்களின் இந்தத் தேசத்திரட்சியைக் கேலிக்குரியதொன்றாக்கியுள்ளதோடு, தொடர்ந்தும் மக்களையும் உழைத்த தரப்புக்களையும் ஏமாற்ற முயலும் மக்களால் புறக்கணிக்கப்பட்ட இந்த தமிழ்த் தேசியப் போலிகளை மக்கள் இனங்கண்டு கொள்ள வேண்டும். இது போன்ற தமிழ்த் தேசியப் போலிகள் மக்களிடையே தமிழர் தேசத் திரட்சியின் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதோடு, கூட்டு வேட்கையினையும், கூட்டு மனோபலத்தையும் தகர்த்தெறிந்து தென்னிலங்கைக் கட்சிகளை நோக்கி மக்களை நகர்த்துவதற்கு தமிழ்த் தேசியத்தின் பெயரால் முயன்று கொண்டிருக்கின்றன.

சில தமிழ்த் தேசியப் போலிகள் அரச தலைவர் தேர்தலில் ஒரு பக்கம் தென்னிலங்கைக் கட்சிகளுடன் இருட்டு ஒப்பந்தமும், மறுபக்கம் தமிழ் மக்களின் வாக்குகளிற்காக பொதுக் கட்டமைப்பின் வேட்பாளர் தரப்புடன் இணைந்து ஒப்பந்தமும் செய்துகொண்டிருந்தமையினையும் யாரும் அறியாமலில்லை. அதற்காக உழைக்காத தரப்புக்கள் அரசியல் சூழ்ச்சிகளினால் இன்று தமிழ் வேட்பாளரின் சின்னத்தைக் கைப்பற்றுவதனூடாக நாடாளுமன்றத் தேர்தலில் மக்களாணை பெறக் பகற்கனவு காணுகின்றன. பொதுக் கட்டமைப்பு வேட்பாளரின் சின்னம் தற்பொழுது அவரை நிறுத்திய தரப்புக்களுடையதல்ல, வேறு கட்சிகளினுடையது என்பதனை அனைவரிடமும் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டும்’’ என்று தெளிவுபடுத்துகின்றது அறிக்கை.

பொதுக் கட்டமைப்பை ஆதரித்த தரப்புக்களில் ஒன்றாக இருந்த நிலையில் மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்தி, தமிழ்த் தேசியப் போலிகளை இனங்கண்டு ஒதுக்கச் சொன்னதன் மூலம் மாணவர் ஒன்றியம் ஆற்றியிருக்கும் பணி பாராட்டப்பட வேண்டியதுதான். ஆனால் அறிக்கையுடன் நிற்பது மட்டும் இந்த விடயத்தில் பயன்தந்துவிடாது என்பதைப் புரிந்துகொண்டு செயலாற்றுவதும் அவர்களின் கடமை.



## வட- கிழக்கு தமிழ், முஸ்லிமகள் மத்தியில் ஜேவிபி செய்யவேண்டியவைகள் என்ன?

**இம்தியாஸ் ரசாக்**

இலங்கையில் சமீபத்தில் நடந்து முடிந்த 9ஆவது ஜனாதிபதித் தேர்தலில், இரண்டாவது வாக்கு எண்ணிக்கையின் பின்னர் ஜனாதிபதி பதவியைப் பெற்ற அநுரகுமார திசநாயக்க தலைமையிலான மார்க்சிஸ்ட் ஜே.வி.பி. குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றது. தேர்தல் முடிவுகள் மக்களின் ஆதரவு கணிசமாகப் பிளவுண்டிருப்பதைக் காட்டுகின்றன. பெரும்பான்மையான தென்னிலங்கை சிங்கள-பௌத்தர்கள் திசநாயக்கவின் பின்னால் அணிதிரண்ட அதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பெரும்பாலும் ஜே.வி.பி.யை நிராகரித்தனர். இந்த நிராகரிப்பு இந்திய வம்சாவளி தமிழர்களிடமும் நீட்டித்திருந்தது,

### ஏன்?

இந்தத் தேர்தல் பிளவுக்குப் பல காரணிகள் பங்களிக்கின்றன. வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் தலைவர்கள் சஜித் பிரேமதாசவுடன் தங்களை இணைத்துக்கொண்டது, ஜே.வி.பி. மீது அவர்களின் ஆழமான நம்பிக்கையின்மையை பிரதிபலிக்கிறது. சிங்கள- பௌத்த தேசியவாதத்தின் அடிப்படைக் கல்லான இலங்கையின் ஒற்றையாட்சி அரசகட்டமைப்பைப் பேணுவதற்கான ஜே.வி.பி.யின் அர்ப்பணிப்பிலிருந்தே இந்த நம்பிக்கையின்மை எழுகிறது. ஜே.வி.பி இலங்கையில் இன மோதலை உரிமைகள்மற்றும்அங்கீகாரத்திற்கானபோராட்டமாக கருதாமல் பயங்கரவாதப் பிரச்சினையாகவே கருதியது; கருதுகிறது.

அவர்களின் இந்த நிலைப்பாடு புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் அரசுக்கு முழு ஆதரவளிப்பதற்கும் இந்திய- - இலங்கை சமாதான ஒப்பந்தத்தை எதிர்ப்பதற்கும் வழிவகுத்தது. வரலாற்று ரீதியாக, இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு ஆதரித்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் மூலம் தமது எதிர்ப்பை ஜேவிபி வெளிப்படுத்தியது. இதில் இனப் பதற்றங்களைத் தணிக்கும் நோக்கத்துடன் உடன்படிக்கைக்கு ஆதரவளித்த, கவர்ச்சி மிகு இளம் தலைவரா விஜய குமாரதுங்கவின் படுகொலையும் அடங்கும்.

தமிழ் மற்றும் முஸ்லீம் சமூகங்கள் ஜே.வி.பியை ஒதுக்குவதுஒருமுக்கியமானகேள்வியைஎழுப்புகிறது. அனைவரையும் உள்ளடக்கிய இலங்கையை ஜே.வி.பி. வளர்க்க விரும்பினால், அது நேரடியாக இந்தக் கேள்வியை எதிர்கொள்ளவேண்டும். அவ்வாறு செய்வதற்கு, கட்சியானது 19 ஆம் நூற்றாண்டின் மார்க்சிய சித்தாந்தத்திற்கு அப்பால் பரிணமிக்கவேண்டும். வடக்குமற்றும்கிழக்குமக்கள் எதிர்கொள்ளும் குறைகள் குறித்து நுணுக்கமான புரிதலை வளர்த்துக்கொள்ளவேண்டும். இந்த பரிணா மாற்றத்திற்கு அரசியல் தைரியம், சிந்தனையாற்றல் மற்றும் இந்த சமூகங்களை பாதிக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான உண்மையான அர்ப்பணிப்பு தேவைப்படுகிறது.

### ஜேவிபி என்ன செய்ய முடியும்?

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து ஒற்றையாட்சியைநிலைநிறுத்தியமகிந்தராஜபக்சவின் சிங்கள, பௌத்த ஆதரவு வாக்காளர் தளத்தை ஜே.வி.பி ஊடுருவத் தொடங்கியுள்ளதாக தேர்தல் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஜே.வி.பியின் வரலாற்று நிலைப்பாடு மற்றும் தற்போது அவர்கள் பெற்றிருக்கும் வாக்குகளைக் கருத்தில்கொண்டு பார்க்கும்போது, அவர்கள் இன மோதலுக்கு அர்த்தமுள்ள அரசியல் தீர்வைக் காண்பதற்கான வாய்ப்பில்லை என்று தோன்றுகிறது. - இது அவர்களின் தேசிய நல்லிணக்கத்திற்கான பரந்த அழைப்பின் சாத்தியக்கூறுகளுக்குத் தடையாக இருக்கும்.

மிதவாத தமிழ் தேசியவாதிகள் இலங்கையின் ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்காத ஒரு விரிவான தீர்வையே நாடுகின்றனர். எவ்வாறாயினும், தமிழர்கள் இந்தத் தீவில் அமைதியாக இணைந்து வாழ விரும்புவதை பெரும்பான்மையான சிங்களவர்கள் பெரும்பாலும் கவனிக்கவில்லை. பல சிங்களவர்களுக்கு, ஒற்றையாட்சி அரச கட்டமைப்பை உள்ளடக்கிய அரசமைப்பானது, 5 ஆம் நூற்றாண்டு சிங்கள வரலாற்றின் மீமகாவம்சமீ வரலாற்றுக் கதைகளில் ஆழமாக வேரூன்றிய ஒரு கூட்டு உளவியல் பாதுகாப்பை வலுப்படுத்த உதவுகிறது. சாதாரண சிங்கள வாக்காளர்களோ, குறிப்பாக ஜே.வி.பி.க்கு ஆதரவளித்த கிராமப்புற வாக்காளர்கள், ஒற்றையாட்சி அரசமைப்பு பாதுகாப்பையும் வறுமையிலிருந்து வெளியேறும் பாதையையும் வழங்குகிறது என்று நம்புகின்றனர். மாறாக, தமிழர்கள் அதனை அரச ஒடுக்குமுறையின் வெளிப்பாடாகவே பார்க்கின்றனர். இதன் விளைவாக, ஜே.வி.பியானது அதிகாரப் பகிர்வு குறித்த தனது நிலைப்பாட்டை கணிசமாக மாற்றும் அல்லது சிறுபான்மை சமூகங்களின் அபிலாஷைகளை அங்கீகரிக்கும் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கமுடியாது.

### ஜேவிபிக்கு சில வழிகள்

#### 1. வரலாற்றுக் குறைகளை ஒப்புக்கொள்தல்

ஜே.வி.பி., இந்திய- - இலங்கை சமாதான உடன்படிக்கைக்கு எதிராகக் காட்டிய வரலாற்று எதிர்ப்பு மற்றும் தமிழர் உரிமைகளுக்காக வாதிடுபவர்களுக்கு எதிரான நிழ்த்திய வன்முறை உட்பட கடந்தகால அநீதிகளை வெளிப்படையாக அங்கீகரித்து நிவர்த்தி செய்ய ஷ்ரீவேண்டும். இந்தக் குறைகளை ஒப்புக்கொள்வது நம்பிக்கையை வளர்ப்பதில் ஒரு முக்கியமான படியாகும்.

#### 2. ஒரு கூட்டாட்சி கட்டமைப்பை ஊக்குவித்தல்

மாகாணங்களுக்கு கணிசமான சுயாட்சியை வழங்கும் ஒரு கூட்டாட்சி அமைப்புக்காக வாதிடுவது சிறுபான்மைசமூகங்களின்அபிலாஷைகளைநிவர்த்தி செய்ய உதவும். இந்த அணுகுமுறை தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் தனித்துவமான கலாச்சார மற்றும் அரசியல் தேவைகளை அங்கீகரிப்பதற்கான

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# வட- கிழக்கு தமிழ், முஸ்லிமகள் மத்தியில்.......



அர்ப்பணிப்பைக் குறிக்கும்.

### 3. ஆக்கபூர்வமான உரையாடலில் ஈடுபடல்

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சமூகத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் திறந்த தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும். வழக்கமான ஆலோசனைகள் இந்த சமூகங்களின் கவலைகள் மற்றும் அபிலாஷைகளைப் புரிந்துகொள்ள ஜே.வி.பி.க்கு உதவும்.

### 4. பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்தல்

வடக்கு மற்றும் கிழக்கில் இலக்கு பொருளாதார அபிவிருத்தி முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்த சமூகங்களின்வாழ்க்கைநிலைமைகளைமேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை நிரூபிக்க முடியும். பொருளாதார வலுவூட்டல் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் வளர்க்கும்.

### 5. சிறுபான்மை உரிமைகள்

தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் மற்றும் மேம்படுத்தும் கொள்கைகளை ஜே.வி.பி தீவிரமாக ஊக்குவிக்கவேண்டும். மொழி உரிமைகள், கலாசார பாதுகாப்பு மற்றும் ஆளும்தரப்பில் போதிய பிரதிநிதித்துவம் ஆகியனவும் இதில் உள்ளடங்கும்.

### 6. நல்லிணக்கம்

அனைத்து இன மக்களிடையேயும் நல்லிணக்கத்தை முதன்மைப்படுத்தும் கட்சியாக ஜே.வி.பி அமைதி, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை வலியுறுத்தும் வகையில் தனது வெளிப்பாடுகளை மறுவடிவமைப்பது கருத்துகளை மாற்ற உதவும். .

### 7. நிலைமாறுகால நீதி பொறிமுறைகளை ஆதரித்தல்

கடந்தகால மனித உரிமை மீறல்களை நிவர்த்தி செய்வதற்கான நிலைமாறுகால நீதி நடவடிக்கைகளை ஜேவிபி ஆதரிக்கவேண்டும். பொறுப்புக்கூறல் மற்றும் குணப்படுத்துதலுக்கான ஜேவிபியின் அர்ப்பணிப்பை நிரூபிக்க இது உதவும். இது உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுக்களை ஆதரிப்பது அல்லது பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கானஇழப்பீடுகளைவழங்குவதுஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருக்கலாம்.

### 8. கல்வி மற்றும் விழிப்புணர்வு

ஜே.வி.பி. இன நல்லிணக்கத்தின் முக்கியத்துவம் வழங்கி ஐக்கிய இலங்கையின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் கல்விப் பரப்புரைகளில் ஈடுபடவேண்டும். இது வரலாற்று சார்பு மற்றும் தவறான எண்ணங்களை எதிர்க்க உதவும்.

### 9. சிவில் சமூகத்துடன் ஒத்துழைக்கவும்

உள்ளூர்அரசசார்பற்றநிறுவனங்கள்மற்றும்சமூகஅமைப்புகளுடன் இணைந்து செயற்படுவது ஜே.வி.பிக்கு அடிமட்ட ஆதரவைக்கட்டியெழுப்பவும்வடக்குமற்றும்கிழக்கில்அதன்நம்பகத்தன்மையை அதிகரிக்கவும் உதவும். சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் ஒத்துழைப்பு நம்பிக்கையை வளர்க்கும்.

### 10. அரசியல் சித்தாந்தத்தை மாற்றியமைக்கவும்

19 ஆம் நூற்றாண்டின் கடுமையான மார்க்சிய சித்தாந்தத்திற்கு அப்பால் சென்று நடைமுறை அரசியல் அணுகுமுறையைத் தழுவுவது ஜே.வி.பி. பல்வேறு சமூகங்களுடன் சிறப்பாக ஊடாடுவதற்கு உதவும். இலங்கையின் இன நிலப்பரப்பின் சிக்கலான தன்மைகளைக் கற்றுக்கொள்வதற்கும் மாற்றியமைப்பதற்கும் விருப்பம் இதற்கு அவசியம்.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் நம்பிக்கையை வென்றெடுப்பது ஜே.வி.பியின் நீண்டகால வெற்றிக்கும் தேசிய நல்லிணக்கத்தின் பரந்த இலக்கிற்கும் அவசியமாகும். இந்த உத்திகளை நடைமுறைப்படுத்துவதன்மூலம்,அனைத்துஇலங்கையர்களின் தேவைகள் மற்றும் கவலைகளை நிவர்த்தி செய்வதற்கான உண்மையான அர்ப்பணிப்பை ஜே.வி.பி வெளிப்படுத்த முடியும், எல்லோரையும் உள்ளடக்கிய அரசியல் சூழலுக்கு அது வழி வகுக்கும்.

சுருக்கமாகச் சொன்னால், 9ஆவது ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள், இலங்கையின் அரசியல் நிலப்பரப்பின் சிக்கல்களை மட்டுமல்ல, ஜே.வி.பி உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் தேசத்தின் பலதரப்பட்ட குரல்களுடன் ஆக்கப்பூர்வமாக ஈடுபடுவதற்கான அழுத்தமான தேவையையும் விளக்குகிறது. ஐக்கிய மற்றும் இணக்கமான இலங்கையை வளர்ப்பதற்கு இந்த ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வது அவசியமாகும்.




காலைக்கதிர்
Kalaikkathir

# எமது போராட்டத்தை ஒடுக்கத் திட்டம்; ஒப்படைக்கப்பட்ட ஆயிரம் சிறுவர்கள்

## 39 குழந்தைகளுக்கு என்ன நடந்தது?

## வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் கேள்வி



காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான போராட்டத்தைதிட்டமிட்டுஒடுக்கமுயற்சிக்கும் செயற்பாட்டை வன்மையாக கண்டிப்பதாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்உறவுகளின்சங்கத்தினது நிர்வாகிகள் கூட்டாக கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அத்தோடு, வடக்கு, கிழக்கில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட 1000க இற்கும் மேற்பட்ட சிறுவர்கள், 39 இற்கும் மேற்பட்ட கைக்குழந்தைகளுக்கு என்ன நடந்தது எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக இச்சங்கத்தினர் வவுனியாவில் வியாழக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் –

எட்டு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளாகிய நாம் சர்வதேசத்திடம் நீதி கோரிய எமது போராட்டமானது பல இன்னல்களையும் துன்பங்களையும் சுமந்த போராட்டமாக பதினைந்து வருடங்கள் கடந்துள்ளது.

இங்கு மாறி மாறி ஆட்சிக்கு வரும் இலங்கை அரசிடம் பல வழிகளிலும் நீதி கேட்டு நின்றோம். நீதி கிடைக்காத நிலையில் சர்வதேச நீதியை தேடி 2018ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை ஜெனிவா மற்றும் ஏனைய நாடுகளுக்கு சென்று வருகின்றோம்.

எட்டு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கும் தலைமைகளுக்கும் சிறீலங்கா காவல்துறை விசாரணை, புலனாய்வுத்துறை விசாரணை என அதிகளவில் மன உளைச்சல்கள், எண்ணிலடங்காத அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் நாம் எப்போதும் எமக்கான, நீதிக்கான போராட்டத்தை கை விடப்போவதில்லை என உறுதி எடுத்துக்கொள்கின்றோம்.

இந்நிலையில் சர்வதேச சிறுவர் தினத்தன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளுக்கு சர்வதேச நீதி கோரி கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கோண்டோம்.

வடக்கு, கிழக்கில் 1000 இற்கு மேற்பட்ட சிறுவர்கள், 39 இற்கும் மேற்பட்ட கைக்குழந்தைகள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். அந்த குழந்தைகளுக்கு என்ன நடந்தது என மீண்டும் மீண்டும் கேட்டு நிற்கிறோம்.

இந்தக் குழந்தைகளை வலிந்து காணாமலாக்கிய விடயத்தில் உலகளாவிய ரீதியில் சிறீலங்கா முதலாம் இடத்தை பெற்று நிற்கிறது.

அண்மையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி எஸ்.ஜெனித்தா அவர்களின் தலைமையில் வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டம் நடந்துகொண்டிருந்தபோது போராட்ட இடத்துக்கு வந்த ஒரு நபர் தான் அநுரவின் ஆள் எனவும் இங்கு போராட்டம் செய்யவேண்டாம் எனவும் எச்சரித்தார். அதற்கு தாய்மார் இது ஜனநாயக போராட்டம். நாம் இதை ஏன் நிறுத்த வேண்டும் என்று கேட்டனர். அதற்கு அந்த நபர் மிக மிக மோசமான வார்த்தைகளை பயன்படுத்தி கத்தினார். அவருடைய தொனியில் எமது போராட்டத்தை குழப்புவதற்காக அனுப்பப்பட்ட ஒருவராக எமக்கு தெரிந்தது.

இதையெல்லாம்கதைக்கநீர்யார்என்றுகேட்டபோது, அந்த நபர் நான் அநுரவுடன் ஒன்றரை வருடமாக இருக்கின்றேன். அவர் ஜனாதிபதியாக வந்துவிட்டார். அதனால் உங்களை போராட்டம் செய்ய விடமாட்டேன் என்று இறுமாப்புடன் கூறினார். அதுமட்டுமல்ல, உங்களை எல்லாம் கைது செய்யப்போகிறேன் என்று தகாத வார்த்தைகளால் பேசி எமது தாய்மாரை மன உளைச்சலுக்கு உள்ளாக்கினார்.

இவர் ஜனாதிபதி அநுரவின் ஆளோ அல்லது பொலிஸாரின் ஆளோ அல்லது புலனாய்வுத்துறையின் ஆளோ அல்லது வேறுயாருடைய ஆளோ என்று தெரியாது. இங்கு குழப்பத்தை ஏற்படுத்தியவருக்கும் அவரை இயக்குபவருக்கும் நாம் வன்மையான கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், எமது போராட்டத்தை குழப்ப வரும் எவரானாலும் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் உறவுகளை உயிருடன் ஒப்படைத்துவிட்டு அவர்களை தேடிக்கொண்டிருக்கின்றோம்.

இந்த போராட்டத்தில் எம்முடன் இருந்த 280க்கும் மேற்பட்ட உறவுகளை நாம் இழந்துவிட்டோம். இதற்கு யாருமே பதில் சொல்ல முன்வரவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம். ஆகவே எமது போராட்டம் எமக்கு சர்வதேச நீதி கிடைக்கும் வரை தொடரும் என பிரகடனப்படுத்துகின்றோம். – என்றனர்.

இந்த ஊடக சந்திப்பில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவி எம். உதயச்சந்திரா, செயலாளர் ரி .செல்வராணி உட்பட ஏனைய மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர். (05)

# தொழில் அமைச்சின் புதிய செயலாளராக எஸ்.ஆலோக பண்டார நியமனம்பெற்றார்



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் தொழில் அமைச்சு என்பவற்றின் புதிய செயலாளராக எஸ். ஆலோக பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவால் வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டது.(05)

# மரக்கறிகளின் விலைகள் நுவரெலியாவில் வீழ்ச்சி

## விவசாயிகள் பாதிப்பு

நுவரெலியாவில் அண்மைக்காலமாக நிலவிய மரக்கறிகளின் விலைகளுடன் ஒப்பிடுகையில் வியாழக்கிழமை நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலை குறைந்துள்ளது. இதனால் விவசாயிகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். மரக்கறி வகைகளின் தொகை அதிகரித்துள்ளதால், விலைகள் குறைவடைந்திருப்பதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் அதிகளவில் மரக்கறி உற்பத்தி செய்யப்படுகின்ற மாவட்டங்களில் நுவரெலியாவும் ஒன்றாகும் இம்முறை மரக்கறி வகைகளின் விலைகளில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத வீழ்ச்சியால் கைவிடப்பட்ட நிலையில் காட்சியளிக்கின்றன.

மரக்கறி விலை வீழ்ச்சி குறித்து மேலும் தெரியவருகையில். -

நுவரெலியாவில் அதிகமானோர் விவசாயத்தை மாத்திரம் நம்பி வாழ்க்கை நடத்துகின்றனர். இதனால் இம்முறை கரட் லீக்ஸ் போன்ற மரக்கறிகளை பயிரிட்டுள்ளனர்.

இதே ஐந்து மாதங்களுக்கு முன்பு வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் துரிதமாக அதிகரித்து ஒரு கிலோ கரட் 1800 ரூபாவுக்கு கொள்வனவு செய்து 2000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

தற்போது நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ கரட்டின் மொத்த விலை 70 ரூபா தொடக்கம் 80 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது கரட் உற்பத்தி அதிகமாகியிருப்பதாலும் சந்தையில் கரட்டின் விலை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இம்முறை கரட் பயிரிட்டவர்களின் பலரது தோட்டங்களில் அழுகிய நிலையிலும் முற்றிய காணப்படுகிறது எனினும் உரிய விலை இன்றி சந்தைப் படுத்த முடியாது பெரும் நட்டத்தை தாம் அடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மரக்கறி வகைகளில் விலையில் மாற்றம் ஏற்பட்டிருந்த போதிலும் கிருமி நாசினிகள், நாளாந்த கூலி, பசளை உள்ளிட்டவற்றில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை.

விவசாய பொருள்களின் விலை மற்றும் காலநிலை உள்ளிட்ட சவால்களிற்கு முகம் கொடுத்து விவசாயத்தில் ஈடுபட்டுவரும் எமக்கு, செய்கைக்கு ஏற்ற விலை கிடைக்கவில்லை எனவும், இதன் காரணமாக நாளாந்தம் ஏற்படுகின்ற செலவினை கூட தம்மால் பெற முடியாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

உரிய விலையின்றி விவசாய நிலங்களில் கண்முன்னே அழிவடைக்கின்ற மரக்கறி உற்பத்திகளை பார்க்க மிக வேதனையாக இருப்பதாகவும் பொருளாதார மையங்களில் உரிய விலை கிடைக்காத காரணத்தால் மரக்கறிகளை குப்பையில் போடவேண்டியதாக இருக்கிறது என அங்கலாய்ந்துக் கொள்கின்றனர்.(05)

# பெருந்தோட்ட சமூக உரிமைகள், சவால்கள் குறித்த ஆய்வறிக்கை

## சமூக – பொருளாதார அபிவிருத்தி மையத்தால் வெளியீடு

நாடளாவிய ரீதியிலுள்ள உள்ள பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் நல்வாழ்வுக்காக செயல்படும் தொண்டு நிறுவனமன கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் சமூகப் பிரிவின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி மையமானது 'இலங்கையின் பெருந்தோட்ட சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்விக்கான உரிமை, பிரச்சினைகள், சவால்கள் மற்றும் எதிர்கால மார்க்கங்கள்' மற்றும் 'இலங்கையில் உள்ள பெருந்தோட்ட சமூகங்களின் கலாசாரம் மற்றும் அடையாளம்' என்ற இரு தலைப்புக்களின் கீழ் விரிவான ஆய்வொன்றை நடத்தியுள்ளது.

குறித்து ஆய்வு தொடர்பான ஆவண வெளியீட்டு நிகழ்வு 'பெருந்தோட்ட சமூகத்தின் விடியலை நோக்கி' என்ற தொனிப்பொருளில் வியாழக்கிழமை கொழும்பு 8 இல் உள்ள சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி மையத்தில் இடம்பெற்றது.

சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி மையத்தின் தேசிய இயக்குனர் அருட்தந்தை லூக் நெல்சன் பெரேரா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.துறைராஜா மற்றும் இலங்கைக்கான அப்போஸ்தலிக்க தூதுவர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி பிரைன் உடைகுவே ஆகியோர் கலந்து கொண்டனர்.

நுவரெலியா, கண்டி, மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி மற்றும் கொழும்பு உள்ளிட்ட மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் நிகழ்வில் தம்பபன்னி கிரீன் எட்ஜ்தனியார் தோட்டப்பிரிவின் ஆய்வு ஆலோசகர் கலாநிதி டபிள்யு.ஜி.சோமரத்ன விளக்கமளித்தார்.

அத்தோடு ஆய்வு விளக்கம் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கும் பகுதியும் இடம்பெற்றது.

நிகழ்வில் பெருந்தோட்ட மக்கள் தொடர்பில்லும், இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பிலும் நீதியரசர் எஸ்.துறைராஜா, இலங்கைக்கான அப்போஸ்தலிக்க தூதுவர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி பிரைன் உடைகுவே மற்றும் கண்டி மறை மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய ஆயர் கலாநிதி வலென்ஸ் மெண்டிஸ் உள்ளிட்டோர் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். அத்தோடு குறித்த ஆய்வு ஆவணத்தின் பிரதிகளும் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஈஸ்டர் தாக்குதலின் பின்புலத்தை கண்டறிந்தால் பல அரசியல்வாதிகள் சிறைவாசம் அனுபவிப்பர்

## அருட்தந்தை சிறில் காமினி எதிர்வுகூறல்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்புலத்தை கண்டறிந்து குற்றவாளிகளைக் கைது செய்வதென்பது பெரிய விடயமல்ல. அதனை செய்வதற்கான ஆர்வம் இல்லாமையே இங்குள்ள பிரச்சினையாகும். தாக்குதலின் பின்புலத்தைத் தேடிக் கண்டு பிடித்தால் நாட்டில் உள்ள பல அரசியல்வாதிகள் சிறையில் இருக்கவேண்டிஏற்படும்.இதன்காரணமாகவே இந்ததாக்குதல் தொடர்பான உண்மைகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன எனக் கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு மறைமாவட்டத்தின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி அடிகளார் தெரிவித்தார்.

எனவே இந்த நாட்டை தூய்மைப்படுத்த வேண்டும்.பொதுத் தேர்தலுக்கு முன்னர் அரசியல் கட்சிகள் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். கட்சிக்குள் அழுக்குகளை வைத்துக் கொண்டு நாட்டை தூய்மைப்படுத்த முடியாது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய எழுதிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல், வீதி அரச நிழல் மற்றும் தீர்க்கப்படாத மர்மங்கள் எனும் தலைப்பில் எழுதப்பட்ட புலனாய்வு நூல் வெளியீட்டு நிகழ்வின் செயலமர்வொன்று செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் –

இந்த உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் விவகாரம் 5 வருடங்களாகஏன்இழுத்தடிப்புசெய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது என சிலர் எம்மிடம் வினவுகின்றார்கள். நாட்டில் ஒரு அசம்பாவிதம் இடம் பெற்றால் அதனை காலப்போக்கில் மறந்து விட வேண்டும் எனும் கலாசாரமே உள்ளது.நாம் அவற்றை இயல்பாகவே மறப்பது கிடையாது.

உண்மையில் அவை மறக்கடிக்கப்படுகிறது. இந்த தாக்குதலின் பின்புலத்தில் உண்மையான குற்றவாளிகளைச் சட்டத்தின் முன்னிறுத்த நாம் நடவடிக்கை எடுத்தால் இந்த மறக்கடிக்கப்படும் கலாசாரத்திலிருந்து எம்மால் விடுபட முடியும்.

இந்ததாக்குதலின் போது உயிரிழந்த அப்பாவி மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காக மாத்திரம் நாம் இந்த போராட்டத்தை முன்னெடுக்க வில்லை.நாட்டில் வளமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் தூரநோக்கு சிந்தனையிலேயே இதனை நாம் செய்கிறோம்.

இந்த தாக்குதலின் பின்னணியில் பாரிய சதித்திட்டம் ஒன்றுள்ளது.டபிள்யூ.டி.லிவேரா முதல் தடவையாக இதனை குறிப்பிட்டிருந்தார்.இதனை நாம் நம்புகிறோம்.சட்டமா அதிபர் என்ற வகையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அனைத்து தகவல்களும் அவரிடமே இருந்தன.அரசியல் சதி என்ன என்பது தொடர்பில் அறிந்துகொள்வதே தற்போதுள்ள விடயமாகும்.அது தொடர்பில் ஆணைக்குழுக்கள் கண்டறிந்துள்ளன.

எனினும் முன்னாள் சட்டமா அதிபரும் தற்போதுள்ள சட்டமா அதிபர்களும் அதனை செய்வதில்லை. ஏனைய கொலைகள் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்வது கிடையாது. இந்த இடத்திலேயே நாம் சிக்கியுள்ளோம். சட்டமும் அதே இடைத்திலேயே சிக்கியுள்ளது.

இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சம்பவத்தை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறேன்.அப்துல் லத்தீப் ஜமீல் மொஹமட் என்பவர் தாஜ் சமுத்ரா ஹோட்டலில் வெடிகுண்டை வெடிக்கசெய்யாமல் சென்று விடுகிறார். அவர் அந்த ஹோட்டலில் இருக்கும் போது அவருக்கு தொலைபேசி அழைப்பு கிடைக்கப்பெற்றது.

அதற்கு அவர் பதிலளித்தார்.அதனை சிசிரிவி காட்சிகளில் காணமுடியும். அதன்பின்னரே அவர் தாஜ்சமுத்ராஹோட்டலில் இருந்து வெளியேறி சென்றார். அந்ததொலைபேசி அழைப்பை யார் மேற்கொண்டது என்பதை கண்டறிந்திருந்தால் இந்த தாக்குதலின் பின்னணியில் யார் இருந்தார் என்பதை கண்டுபிடிக்க முடியும். இதுவரை அதனை அவர்கள் செய்யவில்லை.

ஜமில் மரணிக்க முன்னர் உயிருடன் இருக்கும் போதே இராணுவ புலனாய்வுப் பிரிவினர் ஜமிலின் வீட்டுக்கு சென்றனர்.உண்மையில் அது எவ்வாறு இடம் பெற முடியும்.அவர் தொடர்பில் இராணுவ புலனாய்வு பிரிவினர் நீண்ட விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

ஜமில்தற்கொலைகுண்டுதாக்குதல்மேற்கொள்ளவுள்ளதாக ஏன் புலனாய்வுப் பிரிவினரால் கண்டுபிடிக்க முடியாமல் போனது?உண்மையில் அவர்கள் அதனை அறிந்திருக்கவில்லையா? அல்லது தெரிந்துகொண்டு அதனை அவர்கள் மறைத்துள்ளார்களா? என்ற கேள்வி எமக்குள்ளது. ஜமில் உயிரிழப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளனர் என்பதே எமது நிலைப்பாடாகும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் ஆட்சி காலப்பகுதியில் திரிப்பொலி எனும் இராணுவப் படை இருந்தது.உயிர்த்த ஞாயிறுதாக்குதல் தொடர்பான பல கொலைச்சம்பவங்கள் உள்ளன உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னரும் பல்வேறு கொலைச்சம்பவங்கள் இடம்பெற்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்புலத்தில் இருந்தவர்களாலேயே அவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சனல் 4 விடயங்கள் தொடர்பில் ஆராய குழுவொன்றை நியமித்தார்.அந்தக்குழு அதன் அறிக்கைகள் ஜனாதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டது.

அதன் பின்னர் அவை சட்டமா அதிபருக்கு சமர்பிக்கப்பட்டதாக எமக்கு தகவல் கிடைத்தது. ஆனால் அந்த அறிக்கை தற்போது காணாமல் போயுள்ளது. அந்த அறிக்கையில் இந்த சம்பவம் தொடர்பில் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கபட்டுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்தன.



இந்த தாக்குதலின் பின்னணியில் உள்ள எமக்கு இருந்த சந்தேகங்களை குறிப்பிட்டு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நாம் கடிதமொன்றைஅனுப்பினோம்.கடந்தவருடம் அக்டோபர்மாதம்ரணில்விக்கிரமசிங்கவுக்கும் கடிதமொன்றை அனுப்பினோம்.

சனல் 4 இல் அசாத் மௌலானா கூறிய விடயங்கள் மற்றும் குண்டு தாக்குதல் இடம் பெறுவதற்கு முன்னர் களனிகம பகுதியில் லொறியொன்றை பொலிஸார் முற்றுகையிட்ட போது அந்த லொறியை விடுவிக்குமாறு தேசபந்து தென்னக்கோன் கட்டளை பிறப்பித்தார்.

அந்த லொறி கட்டுநாயக்கவில் இருந்து பாணந்துறையில் உள்ள வீடொன்றுக்கு சென்றுகொண்டிருந்தது.அதாவது சஹ்ரானின் ளுயகந ர்ழரளந சென்றுக் கொண்டிருந்தது. அப்போது ஏன் அந்த லொறியை சோதனை செய்ய இடமளிக்கவில்லை. அந்த லொறியில் வெடிபொருட்கள் இருந்திருக்கும் என நாம் நம்புகிறோம். அங்கும் விசாரணையை திசை திருப்பினார். இதனை உரிய முறையில் விசாரணை மேற்கொண்டிருந்தாலே இதன் பின்புலத்தை கண்டறிந்திருக்க முடியும்.

சஹ்ரானுக்கு தொடர்ந்தும் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்தார்.அவர் தொடர்பில் ஜனாதிபதியின் விசாரணை ஆணைக்குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. உண்மையில் அதனை ரவி செனவிரத்னவே வெளிப்படுத்தினார். அன்று அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபராக இருந்தார்.இன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக உள்ளார்.

அபுஹிந் யார் என்பது தொடர்பில் தாம் தேடி பார்த்ததாக அவர் அன்று சாட்சி வழங்கியிருந்தார்.விசாரணை நீதிபதி ஒருவர் கடதாசி ஒன்றில் பெயர் ஒன்றை எழுதி ரவி செனவிரத்னவுக்கு அனுப்பினார்.ரவி செனவிரத்ன அதனை வாசித்ததன் பின்னர் நீதிபதி அந்த நபரா இவர் என வினவினார்.அதற்கு அவர் ஆம் என கூறினார். இந்த சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளது.

ஆனால் அந்த கடதாசியில் எழுதப்பட்ட அந்த பெயர் அந்த அறிக்கையில் இல்லை.அபுஹிந் என்பவரே உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி.அவரை தேடி கண்டு பிடிப்பது பெரிய விடயமல்ல. அதனை தேடுவதற்கான ஆர்வம் இல்லாமையே இங்கு உள்ள பிரச்சினையாகும். அதனை தேடி கண்டு பிடித்தால் நாட்டில் உள்ள பல அரசியல்வாதிகள் சிறையில் இருக்க வேண்டி ஏற்படும். இல்லாவிட்டால் வீடு செல்ல வேண்டும். இதன்காரணமாகவே இந்த தாக்குதலின் தொடர்பான உண்மைகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன.

இதன் பின்புலத்தில் உள்ள உண்மையை கண்டறிந்தால் கொலை செய்து அதிகாரத்தை கைப்பற்றும் அரசியல் கலாசாரத்தையும்ஊழல்மிக்கமோசடிஅரசியல்கலாசாரத்தையும் முடிவுக்கொண்டு வர முடியும். குற்றவாளிகளை கைது செய்து சட்டத்தின் முன்னிறுத்துவது, எதிர்காலத்தில் எவர் குற்றம் செய்தாலும் நிச்சயம் ஒருநாள் தண்டிக்கப்படுவார் எனும் பயத்தை ஏற்படுத்த முடியும். எனவே இந்த நாட்டை தூய்மைப்படுத்த வேண்டும்.பொதுத் தேர்தலுக்கு முன்னர் உங்களுடைய கட்சிகளை தூய்மைப்படுத்துங்கள்.கட்சிக்குள் அழுக்குகளை வைத்துக் கொண்டு நாட்டை தூய்மைப்படுத்த முடியாது. – என்றார்.(05)

# அரசுத் தலைவர் தேர்தலும் மக்களின் வாக்களிப்பும் தொடர்பான கலந்துரையாடல் யாழ் பல்கலையில்







அண்மையில் நடைபெற்று முடிவடைந்த 'சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலில் மக்களின் வாக்களிப்பு முறை' எனும் தலைப்பிலான அவையம் படிப்பு வட்டம் மக்களிடையே நிலவும் சமகால அரசியல் சிந்தனைகள் பற்றிய உரையாடல் தளமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் புதன்கிழமைகலைப்பீடகருத்தரங்குமண்டபத்தில் நடைபெற்றது.

தேர்தலுக்குப் பின்னரான நிலை மற்றும் தேர்தல் முடிவுகளில் எவ்விதம் மக்களின் சமூக, பொருண்மிய, அரசியற் காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பது தொடர்பிலும், மக்களிடையேயான அரசியல் விழிப்புணர்வு தொடர்பான கலந்துரையாடலுக்கான தளமாக இம்மாத 'அவையம் படிப்பு வட்டம்' நகர்ந்துள்ளது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் துணைச் செயலாளர் சி.சிவகஜன் தலைமையில் நடைபெற்ற குறித்த 'அவையம்' படிப்பு வட்டத்தில் அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி கணேசலிங்கம், வருகை விரிவுரையாளரும் ஓய்வுபெற்ற நிர்வாக சேவை அதிகாரியான செல்வின் ஆகியோர் கருத்துக்களை முன்வைத்தனர். பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்களிடையே சமூக, பொருண்மிய, பண்பாட்டு, அரசியல் தளங்களில் கருத்து பரிமாற்றத்திற்கான வெளியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## தேர்தலில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போவதில்லைஎனமுன்னாள்ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவிற்கும்அவர் அறிவித்துள்ளார். அவரது முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார் என்றும் அறிக்கை கூறுகின்றது. ஆனால் தனிக்கட்சியாக சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுவது எதிரணியின் பிளவைக் காட்டுவதால் மக்கள் வாக்களிப்பதைத் தவிர்ப்பார்கள் என்றும் அதனால் கட்சி சோர்வடையலாம். இந்நிலையில், இறுதியில் உரிய பேச்சு தோல்வியடைந்ததால் இந்த முடிவை எடுத்ததாக அவர் ருவன் தெரிவித்துள்ளார்.

தான் போட்டியிடாவிட்டாலும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்காக தீவிரமாக பங்காற்றுவார் என்றும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோர் இவ்வருட பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பொது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவின் ஆவணங்களை பொறுப்பேற்கும் கருமபீடத்தில் ஒப்படைக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தினத்திற்கு முன்னதாக துப்பாக்கிகளை மீளக் கையளிக்கத் தவறினால் துப்பாக்கிகள் கட்டளை சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நேரிடும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சொத்துக்களின் பாதுகாப்பு, விவசாய செய்கைகளின் பாதுகாப்பு, விளையாட்டுத் துறைக்காக பாதுகாப்பு அமைச்சு விநியோகித்துள்ள துப்பாக்கிகள் தொடர்பில் குறித்த அறிவித்தல் பொருந்தாது எனவும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முழுமையான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வப்பயணமாக இலங்கை வந்துள்ள இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரையும் சந்தித்துப் பேசினார். முன்னதாக அவர் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க மற்றும் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரையும் சந்தித்துப் பேசியிருந்தார். இந்தச் சந்திப்புக்களில் அவர் மேற்கண்ட கருத்தைப் பகிர்ந்துகொண்டிருந்தார்.

இலங்கையின் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் உடனான தனது கலந்துரையாடல்களின்போது, அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் சாகர் கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இருதரப்பு ஒத்துழைப்பினை மேலும் முன்னேற்றுவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டினை அமைச்சர் ஜெய்சங்கர் வெளிப்படுத்தினார்.

இலங்கையின் முன்னுரிமையின் அடிப்படையிலான பணித்திட்டங்கள் ஊடாக இந்தியா வழங்கிவருகின்ற அபிவிருத்தி உதவிகள் தொடருமெனவும் அவர் உறுதியளித்தார்.

அந்த அடிப்படையில் காங்கேசன்துறை துறைமுகத்தினை 61.5 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை ஊடாக நவீனமயப்படுத்துவதற்கு இந்தியா முன்வந்திருப்பதாக அயலுறவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

அதுமட்டுமல்லாமல் கடனுதவித் திட்டங்களின் கீழ் 20 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியில் நிறைவேற்றப்பட்ட 7 பணித்திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை நன்கொடைத் திட்டங்களாக மாற்றமுடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், இலங்கை தொடருந்து சேவைகளுக்காக டீசலில் இயங்கும் 22 இயந்திரங்களை அன்பளிப்பாக வழங்குவதற்கும் இந்தியா தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி உடனான சந்திப்பின்போது எரிசக்தி உற்பத்தி மற்றும் பரிமாற்றம், எரிபொருள் மற்றும் எல்.என்.ஜி. விநியோகம், வழிபாட்டுத்தலங்களுக்கான சூரியக்கல மின்மயமாக்கல், இணைப்புகள், டிஜிட்டல்பொது உட்கட்டமைப்பு, சுகாதாரம், மற்றும் பால்துறை அபிவிருத்தி குறித்தும் அயலுறவுத்துறை அமைச்சர் உரையாடியிருந்தார்.

இவ்வாறான துறைகள் பொருளாதார உறுதிப்பாட்டுக்குப் பங்களிப்பு வழங்கும் அதேவேளை வருமானத்துக்கான புதிய மார்க்கங்களையும் உருவாக்குமென அவர் சுட்டிக்காட்டியிருந்தார். செழிப்புமிக்க ஓர் இலங்கைக்கான தனது நோக்கினை நனவாக்குவதிலும் மக்களின் விருப்பங்களை நிவர்த்தி செய்வதிலும் இந்தியாவின் பொருளாதார ஆதரவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என இலங்கை ஜனாதிபதி இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்திருந்தார்.

அத்துடன் புதுப்பிக்கத்தக்க சக்தியினை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஆற்றல்கள் குறித்து தெரிவித்திருந்த அவர், இலங்கையில் உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்கும் மேலதிக வளங்களை உருவாக்குவதற்கும் இது ஆதரவாக அமையுமெனவும் குறிப்பிட்டிருந்தார். மேலும் இந்திய சுற்றுலாப்பயணிகளின் பங்களிப்பு தொடர்பாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டதுடன் இத்துறையானது மேலும் வளர்வதற்கான சாத்தியங்களை கொண்டிருப்பதனையும் ஏற்றுக்கொண்டிருந்தார்.

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர், ஆளும்தரப்புடன் மேற்கொண்ட உரையாடல்களின்போது, இந்திய முதலீடுகளுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், இலங்கையில் வேலை வாய்ப்பு உருவாக்கம் மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரித்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக கவனஞ்செலுத்தப்பட்டிருந்தது.

இலங்கையின் ஆளுமைவிருத்தி தேவைகள் மற்றும் பயிற்சிகள் போன்றவற்றினை நிவர்த்தி செய்வதற்கும் இந்திய அரசு தயாராக இருப்பதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய உடனான சந்திப்பில் வெளியுறவுத்துறைஅமைச்சர்சுட்டிக்காட்டினார். அத்துடன் டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பின் மூலமான நலன்கள் குறித்தும் அவர்களது சந்திப்பில் கவனஞ்செலுத்தப்பட்டிருந்தது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சிகள் தொடர்பில் கூறியிருந்த வெளியுறவுத்துறை அமைச்சர், ஆரம்பம் முதலே இலங்கையின் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மீட்சிக்காக இந்தியா ஆதரவளித்துவந்ததாகநினைவூட்டியிருந்தார். இந்தியா முதலாவதாக நிதி உத்தரவாதத்தினை வழங்கியிருந்ததுடன் அதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியம் நீடிக்கப்பட்ட நிதி வசதி குறித்த இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ள வழிகோலப்பட்டது.

நாட்டிற்கான சர்வதேச முறிகளின் உரித்தாளர்களுடனான உடன்படிக்கைகள் தொடர்பாக உத்தியோக பூர்வக் கடன் வழங்குனர்கள் சபையில் இந்தியாவின் ஆதரவை அயலுறவுத் துறை அமைச்சர் உறுதிப்படுத்தினார். இலங்கையுடனான தனது இருதரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் நிறைவேற்றப்படுவதனை துரிதப்படுத்துவதற்கும் இந்தியாவிரும்புகின்றது என்பதையும் அவர் வெளிப்படுத்தினார்.

பாதுகாவல் மற்றும் பாதுகாப்பு துறைகளில் இந்தியா மற்றும் இலங்கையின் நலன்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளமையை இச்சந்திப்புகள் வெளிக்காட்டியிருந்தன என்று ஆளும் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு நாடுகளினதும் ஒத்துழைப்பு பரஸ்பர நலன்களை அடிப்படையாகக் கொண்டதுடன் பிராந்திய உறுதிப்பாடு மற்றும் பாதுகாப்புக்கும் பங்களிப்பினை வழங்குகின்றது. நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு ஆகியவற்றினை ஊக்குவிப்பதற்காக தொடர்ச்சியான பேச்சுக்கள் அவசியமானதெனவும் இந்திய அமைச்சரின் இந்தப் பயணத்தின்போது இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் இலங்கையின் ஆட்புலத்தினை பயன்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாதென ஜனாதிபதி வலியுறுத்தியிருந்தார்.

இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் விவகாரம் தொடர்பாக வெளியுறவுத்துறைஅமைச்சர் கவலையினை வெளியிட்டிருந்தார். இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விரைவில் விடுதலைசெய்யப்படவேண்டுமெனவும், அவர்கள்மீதானகடுமையானஅபராதம்குறித்து மறுபரிசீலனைசெய்யப்படவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்த மனிதாபிமான அடிப்படையிலான அணுகுமுறையானது, இந்தவிவகாரத்தைதீர்த்துவைப்பதற்கானஒரு நிலையான அடித்தளத்தினை உருவாக்கும். மீன்பிடித்துறை மற்றும் மீனவர் சங்கங்கள் குறித்த கூட்டுப் பணிக் குழு கூட்டம் உரிய காலத்தில் நடத்தப்படவேண்டும் என்றும் அவர் வலி-யுறுத்தினார். மேலும், 50 இந்திய மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டமையை அமைச்சர் பாராட்டியிருந்தார்.

இனப்பிரச்சினை சார்ந்த விவகாரங்கள் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பில் இலங்கையின் ஒற்றுமை, ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையைப் பேணுகின்ற அதேவேளை தமிழ் மக்கள் உள்ளிட்ட சகல சமூகங்களினதும் சமத்துவம், நீதி, கௌரவம், சமாதானம் ஆகியவற்றுக்கான அபிலாஷைகளுக்கான இந்தியாவின் ஆதரவினை வெளியுறவுத் துறை அமைச்சர் மீள வலியுறுத்தியிருந்தார்.

இந்த இலக்கை எட்டுவதற்கு இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தினை முழுமையாகவும் வினைத்திறன் மிக்க வகையிலும் அமுல்படுத்துதல் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை முற்கூட்டியே நடத்துதல் ஆகியவைவழிசமைக்கும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பரஸ்பரம் பொருத்தமான ஒரு திகதியில் இந்தியாவுக்கு வருகை தருமாறு பிரதமர் நரேந்திர மோடி சார்பாக ஜனாதிபதிக்கு அழைப்பும் விடுத்தார் அமைச்சர் ஜெய்சங்கர்.

## ஒதுங்கினார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளதுடன் திரைப்பட தயாரிப்பிலும தனது ஆர்வத்தை செலுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தேசிய தொழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி அமைச்சராக பதவியேற்றுள்ள பிரதமர் ஹரிணி அமரசூரிய புதன்கிழமை அமைச்சின் அதிகாரிகளை அமைச்சின் கேட்போர் கூடத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின் போது அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் அதிகாரிகள், நிறுவனங்களின் தற்போதைய நிலைமை மற்றும் அவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிறுவனங்களுக்குள் எழுந்துள்ள பிரச்சனைகள் குறித்து விரிவாக விளக்கினர்.

அத்துடன் சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தி, உணவுப் பாதுகாப்பு, அத்தியாவசியப் பொருட்களின் விலையில் வெளிப்படைத்தன்மை, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் நுகர்வோர் பொருட்களின் தரம், ஏற்றுமதிப் பொருட்களின் தரம் போன்ற விடயங்கள் தொடர்பில் பிரதமர் கேட்டறிந்து கொண்டார் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

தொழில்முனைவோரின் திட்டங்களுக்குக் கடன் வழங்குதல், தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்களை தொடர்ந்து வழங்குதல், பொது நிறுவனங்களின் மறுசீரமைப்பு, அமைச்சின் கீழ் இயங்கும் ஒவ்வொரு நிறுவனங்கள் தொடர்பிலும் கேட்டறிந்த பிரதமர், நிறுவனங்களில் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இலங்கையில் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் தனியான அதிகார சபையொன்றை நிறுவுதல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சட்டங்களை அறிமுகப்படுத்துதல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்பை அதிகபட்சமாகப் பயன்படுத்துவதற்கு அனைவரும் கூட்டாகவும் நெறிப்படுத்தப்பட்ட திட்டத்தின் படியும் செயல்படவேண்டும் என்று பிரதமர் அதிகாரிகளிடம் வலியுறுத்தினார். நிறுவனங்களுக்கிடையில் நல்ல ஒருங்கிணைப்பைப் பேண வேண்டியதன் அவசியத்துவமும் வலியுறுத்தப்பட்டது.

## போர்ப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசுக்கும் இஸ்ரேல் அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் விவசாயத் துறையில் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகிறது. இதற்கமைய, இதுவரையிலும் 2,330 இலங்கையர்கள் இஸ்ரேலில் விவசாயத் துறையில் தொழில்புரிவதற்காகச் சென்றுள்ளனர்.

இஸ்ரேலில் நிலவும் அமைதியின்மை காரணமாக அந்நாட்டில் பணியாற்றும் இலங்கையர்கள் எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்கவில்லை என்று இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் உறுதிப்படுத்தியுள்ளார். அதனடிப்படையில் 118 இலங்கையர்களும் அங்கு அனுப்பப்படவுள்ளனர்.

இஸ்ரேலில் விவசாயத் துறையில் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்காக வேண்டி எவருக்கும் பணம் வழங்குவதைத் தவிர்க்குமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, இலங்கைக்கும், இஸ்ரேலுக்குமான விமானச் சேவைகள் நேற்று முதல் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

ஈரான் – இஸ்ரேல் மோதல் காரணமாக விமானச் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், தற்போதைய நிலையில், மீண்டும் மோதல் அதிகரிக்குமாயின் விமானச் சேவைகள் இரத்துச் செய்யப்படும் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

## ஐ.தே.கவுடனான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றகரமானதாக அமையவில்லை. நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மாத்திரமே ஒன்றிணைவதற்கு முடிவு செய்திருந்தோம். எனினும் ஐக்கிய தேசியக் கூட்டணியுடன் இணைவதற்கு எவ்வித இணக்கப்பாட்டையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

அதேநேரம், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையினையும் முன்வைத்திருந்தோம். நாம் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் இருதரப்பினருக்கும் இடையில் எவ்வித இணக்கப்பாடும் ஏற்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அடிப்படையற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் ஆணைக்குழு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் ஆகியோரை ஊக்குவிக்கும் வகையில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்ட சில நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் பொதுமக்களுக்கு நிவாரணமளித்தல்கள் ஆகிய தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்துள்ள

தொடர்ச்சி 9ம் பக்கம்....

## அடிப்படையற்ற ....

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் மக்களுக்கு நிவாரணமளித்தல்கள் போன்ற பணிகளை அமுல்படுத்துவதற்கு ஆணைக்குழுவின் அனுமதியை பெற்றுக் கொள்வது அவசியமற்றது.

குறிப்பாக 2024 மற்றும் 2025 பெரும்போக விவசாய நடவடிக்கைகளுக்கு உரம் வழங்குதல், கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல், ஓய்வூதிய நிலுவைத் தொகை வழங்கல், நாட்டின் பொதுவான நிருவாகம் மற்றும் அரச சேவையை வினைத்திறனுடனும், பயனுறுதி வாய்ந்த முறையிலும் நடாத்திச் செல்வதற்கு ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட அனைத்துப் பணிகளையும் மீண்டும் அமுல்படுத்துவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஆட்சேபனை ஏதும் கிடையாது.

ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இடைநிறுத்தப்பட்டிருந்த மேற்குறிப்பிட்ட பணிகளை ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடன் அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் ஒருசிலர், தரப்பினர் பொதுமக்களை தவறாக வழிநடத்தும் வகையில் கருத்துக்களை குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான அடிப்படையற்ற கருத்துக்களுக்கு அவதானம் செலுத்தாமல் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானங்கள் மீது நம்பிக்கை வைத்து செயற்படுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கிறோம்.

இருப்பினும் எதிர்வரும் பொதுத்தேர்தல் காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் மேற்குறிப்பிடப்பட்ட பணிகளை அமுல்படுத்துவதற்கும், அரசாங்க மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கும் நியதிச்சட்ட சபைகளுக்கும் சொந்தமான ஆதனங்கள் தேர்தல் காலப்பகுதியினுள் முறைகேடான விதத்தில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கும், ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, இடமாற்றம் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு தொடர்புடைய நிறுவனங்ள் ஆணைக்குழுவின் அனுமதியை பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

## திருமலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடுவது என்று தீர்மானித்தது. அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் மட்டும் அந்தந்த மாவட்டக் குழுக்களுடன் கலந்துரையாடி முடிவு செய்வது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அந்த இரு மாவட்டங்களிலும்கூட தமிழ் அரசுக் கட்சியின் பெயரிலும் வீட்டுச் சின்னத்திலுமே போட்டியிடுவது என்று அரசியல் குழு தீர்க்கமாக முடிவு செய்துள்ளது. இந்த மாவட்டங்களில் தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து போட்டியிட மற்றைய கட்சிகள் முன்வந்தால் அவர்களுக்குத் தமது வேட்பாளர் பட்டியலில் இடமளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

முன்னதாக, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாக முன்னர் இயங்கிப் பின்னர் பிரிந்து சென்ற கட்சிகளைத் தம்மோடு மீண்டும் வந்து சேரும்படி தமிழ் அரசுக் கட்சி அழைப்பு விடுத்திருந்தது. வவுனியாவில் நடந்த கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டது. தமது கட்சியின் பெயர் மற்றும் சின்னத்தின் கீழ் முன்னரைப் போன்றே போட்டியிட வருமாறு அந்த அழைப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் கூட்டமைப்பின் முன்னாள் பங்காளிகள் அந்த அழைப்பை நிராகரித்திருந்தன. தாம் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் கீழேயே போட்டியிடப்போவதாகத் தெரிவித்தன. இருப்பினும் திருகோணமலையில் வீட்டுச் சின்னத்தின் கீழும் அம்பாறையில் ஜனநாயகக் கூட்டணியின் சின்னத்தின் கீழும் போட்டியிடலாம் என்று யோசனை முன்வைத்தன.

இதனை அடுத்தே திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் தமது கட்சியின் பெயர் மற்றும் சின்னத்திலேயே போட்டியிடுவது என்கிற முடிவைக் கட்சியின் அரசியல்குழு எடுத்துள்ளது. இந்த மாவட்டங்களில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளைச் சேர்ந்து நின்று போட்டியிடுமாறு வலியுறுத்துபவர்களிடம் கட்சியின் முடிவைத் தெரிவிக்கும்படி அந்தந்த மாவட்டப் பிரதிநிதிகளுக்கு அரசியல் குழுவால் அறிவுறுத்தலும் விடுக்கப்பட்டது.

## தமிழ் ....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய சித்தாந்தத்தை சமூக, பொருண்மிய, பண்பாட்டுத் தளங்களில் மக்களுக்கானதாகக் கொண்டு போய்ச் சேர்ப்பதில் எந்த முனைப்பையும் காட்டாத தமிழ்த்தேசிய முலாம்பூசிய அரசியல்வாதிகள், அரசியற் கட்சிகள் மீதான பெரும் அதிருப்தி வெகுவாக மக்கள் மத்தியில் உணரப்பட்டு வருகின்றது.

தமிழ்த் தேசியத்தை மக்களின் இருப்புக்கானதாக மாற்றியமைப்பதற்கு உளச்சுத்தியோடு முனைந்து விடாத தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் தமிழ்த் தேசியத்தை மக்களின் வாழ்வியலில் இருந்து அகற்றி, கட்சிகளின் தேர்தல் கால கோசங்களாக மாற்றியமைத்துள்ளன. தேர்தலில் போட்டியிடுவதையே இலக்காகக் கொண்ட இவர்களின் இயலாமைகள், தமிழ் மக்களின் கூட்டு முகவராண்மையினை தகர்த்தெறிவதிலும் மக்களின் உயிர்வாழ்தலுக்கு அவசியமற்றதொன்றாக தமிழ்த்தேசியத்தைக் கட்டமைப்பதிலும் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் புலனாய்வுத்துறை உள்ளிட்ட சிறிலங்கா அரச இயந்திரத்திற்கு பெருமளவு துணைபுரிந்துள்ளன.

தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் ஏற்பட்ட அலையில் தமிழ் மக்களிடையே குறிப்பாக இளையோர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்த கரிசனை தமிழ்த் தேசிய அரசியற்பரப்பில் தவிர்த்துப்புறமொதுக்க முடியாதவொன்றாகும். தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கும், அரசியற் பண்பாட்டிற்கும் முற்றிலும் எதிரான அரசியலை முன்னெடுத்த தமிழ்த் தேசியப் போலிகளை இந்த மண்ணிலிருந்து துடைத்தெறிந்து புதிய தமிழ்த் தேசிய அரசியற் பண்பாட்டை தோற்றுவிப்பதே உண்மையான மாற்றமாகும். மாறாக ஊழல் எதிர்ப்பு, கவர்ச்சி அரசியலினால் தென்னிலங்கைத் தரப்புக்களை தமிழ் அரசியலிற்கு மாற்றாக முன்னிறுத்துவது அரசியல் தற்கொலைக்குச் சமமாகும்.

தமிழ் அரசியலானது முன்நகர முடியாமைக்கு அகவயமான முற்போக்கு மாற்றங்களை காலத்திற்குக் காலம் மேற்கொள்ளத் தவறியமையும், எம்மிடையே நிலவும் சில போதாமைகளுமே காரணம். அவ்வாறிருக்கையில் மக்கள் மத்தியில் நிலவும் சில முன்மொழிவுகளை தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகளை நோக்கி முன்வைக்கின்றோம்.

1. சமூக, பொருண்மிய, அரசியல், கல்வி, பண்பாடு, சூழலியல் தளங்களிலிருந்து தமிழ்த் தேசியத்தில் முற்போக்கான, ஆழமான, பரந்த பார்வை கொண்ட செயற்பாட்டாளர்களை, துறைசார் வல்லுனர்களை வேட்பாளர்களாக முன்நிறுத்த முன்வர வேண்டும்.

2. இதுவரை காலமும் இரண்டு தடவைகளுக்கு மேல் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்றவர்கள் தேர்தல் அரசியலிற்கு ஓய்வு கொடுத்து மக்கள் அரசியற் தளத்தில் செயற்படவேண்டும்.

3. 40 - 50 சதவீதத்திற்குக் குறையாமல் இளைவர்களிற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

4. தமிழ்த் தேசியம் முற்போக்கானதாக நிலைமாற்றம் கொள்வதற்கு பெண்கள், சிறுவர்கள், மாற்றுப்பாலினத்தவர்கள், ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்கள் உள்ளிட்டோரை பிரதிநிதித்துவம் செய்யக் கூடியவர்களுக்கு வாய்ப்பளித்தல் கட்டாயக் கடமையாகும்.

5. வேட்பாளர் தெரிவின் போது உணர்ச்சி நிலையிலிருந்து மட்டும் அணுகுபவர்கள் தவிர்க்கப்பட்டு, தமிழ்த் தேசியத்தை உணர்வுடன்கூடிய அறிவுசார் தளத்தில் முன்னெடுக்க கூடியவர்களிற்கு வாய்ப்பளிக்கப்படவேண்டும்.

6. தேசியப் பட்டியல் பிரதிநிதித்துவத்தில் தேர்தலில் தோற்றவர்களிற்கு வாய்ப்பளித்தல் மக்களாணைக்கு எதிரானதாகும். மேலும் கட்சி உறுப்பினர்கள் என்று பாராமல், கற்றறிந்த செயற்பாட்டாளர்களிற்கு வாய்ப்பளிப்பதற்கு முன்வர வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகளை அகவயமான முற்போக்கு மாற்றங்களை நோக்கித்தூண்டுவதும், அவற்றைத் தொடர்ந்து கண்காணிப்பதிலுமே உண்மையான மாற்றம் தமிழ்த் தேசியப் பரப்பில் தங்கியுள்ளது. இளையோருக்கான பிரதிநிதித்துவம் வழங்குவதில் தனியே வாக்குகளைத் திரட்டக் கூடியவர், கவர்ச்சிகர - பிரமுகர் அரசியல் என்பவற்றிற்கு முன்னுரிமை வழங்குதல் அல்லது கற்றறிந்தவர் என்று தமிழ்த் தேசிய விடுதலைக்கு அப்பால் சிந்திக்கக்கூடிய கொழும்பு மைய மேட்டுக்குடி அரசியற் பண்பாட்டிற்குப் பழக்கப்பட்டவர்களை முன்னிறுத்துதல் என்பவவும் பழைய குருடி கதவைத் திற என்பதற்குச் சமனானது.

### கிழக்கில் தமிழர் இருப்பு

தமிழ்ப் பிரதிநிதித்துவம் ஏற்கனவே இல்லாமற் போய்விட்ட அம்பாறை மற்றும் இல்லாமற் போகக் கூடிய திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். தமிழ்த் தேசியக் கட்சிகள் கட்சி வேறுபாடுகள் கடந்து போட்டித் தவிர்ப்பு, விட்டுக் கொடுத்தல் அல்லது இணைந்து போட்டியிடக் கூடிய பொருத்தமான பொறிமுறைகளின் ஊடாக அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தையாவது காத்திட முன்வர வேண்டுகின்றோம்.

வடக்கு - கிழக்கிற்கு வெளியில் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் போட்டியிட முயற்சிப்பதென்பது தமிழ்த் தேசிய அரசியலை வலிந்து தூக்கிலிடுவதற்கு ஒப்பானது. இது போன்ற நகர்வுகள் தமிழ்த் தேசிய இறைமை அரசியலை அடையாள அரசியலிற்குள் சுருக்கும் முயற்சிகளாகும் என்பதைப் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளோம். இது தாயகத்தில் நிலவும் உரிமைசார் போராட்டங்கள் ஒவ்வொன்றினையும் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரலிற்குட்பட்டு ஒரு நாடு - ஒரு தேசம் நீரோட்டத்தினுள் வலிந்து இழுத்துச் செல்லும் நுண் அரசியலாகும்.

வடக்கு - கிழக்கிற்கு வெளியில் போட்டியிடத் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் முயல்வதென்பது தாயகநிலஒருமைப்பாட்டிற்கு அப்பாலானது என்பதோடு, தேசியப் பட்டியல் நாடாளுமன்றபிரதிநிதித்துவத்திற்காகவேயன்றி வெறெதற்குமல்ல. இந்த முயற்சி தாயகத்திற்கு வெளியிலுள்ள ஈழத்தமிழர்களின் உரிமைசார் நட்புசக்திகளை நாம் இழப்பதற்கு வழிகோலும் என்பதனையும் எச்சரிக்கையுடன் பதிவு செய்கின்றோம்.

### தமிழ்த் தேசியப் போலிகளை ஒதுக்குதல்

தமிழ் மக்களை அணி திரட்டும் நோக்கில் குடிமக்கள் அமைப்புக்கள் (ஸீஷ்ஸஷ்யி ீலி- உஷ்ளமிதீ) மற்றும் சில அரசியல் கட்சிகளால் கூட்டாக இணைந்து நிறுத்தப்பட்ட தமிழ்ப் வேட்பாளர் தமிழ் மக்களைத் தேசமாகத் திரட்டுதல், கடந்த கால வரலாற்றுத் தவறுகளை மீளமேற்கொள்வதைத்தவிர்த்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டிருந்தார். தமிழ்ப் பொது வேட்பாளரிற்கு அவரை முன்நிறுத்திய தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பிற்கு அப்பால் பல குடிமக்கள் அமைப்புக்கள் மற்றும் அரசியற் கட்சிகள் தேசத்திரட்சிக்காக பணியாற்றின என்பதோடு, மக்களும் தமிழர் தேசம் என்ற அடிப்படையிலே தங்கள் வாக்குகளை அளித்தார்கள் என்பதை யாரும் மறுக்கவியலாது.

பொது வேட்பாளரிற்காக வழங்கப்படும் கட்சிச் சின்னம் அடுத்து வரும் சில தேர்தல்களிற்கு பயன்படுத்தக்கூடாது எனும் குடிமக்கள் அமைப்புக்களின் அறம் சார் நிபந்தனைகளை அரசியற் கட்சிகள் எவையும் ஏற்றுக்கொள்ள மறுத்த நிலையிலேயே சுயேச்சையாக வேட்பாளர் களமிறக்கப்பட்டார் என்பதை அறியக்கூடியதாகவுள்ளது. எனினும் தமிழ் வேட்பாளரை நிறுத்துவதற்கு உடன்பட்ட தரப்புக்களில் குடிமக்கள் சமூகங்களினதும் ஏனைய கட்சிகளினதும் உடன்பாடுகள் ஏதுமின்றி தங்களிற்கிருந்த அறம்சார் கடப்பாட்டினை மீறி மக்களால் புறக்கணிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் கூட்டணியொன்று தேர்தல் ஆணைக்குழுவில் பொது வேட்பாளரின் சின்னத்தினைக் கோரிப் பெற்றுள்ளது. குடிமக்கள் சமூகங்களின் கூட்டிணைவிற்குள் செயற்படும் சிலர் தங்கள் சிந்தனைகளோடு குடிமக்கள் சமூகத்தினரை நகர்த்திச் செல்ல முயற்சிப்பது வருந்தத்தக்கது. தொடர்ந்தும் மக்களை மடையர்கள் என்றெண்ணிச் செயலாற்றும் இதுபோன்ற அறம் பிழைத்தவர்களை மக்கள் நாங்கள் தோலுரித்தல் அவசியமாகும்.

தமிழ் மக்களை தேசமாகத் திரட்டுவதிலும் ஒரு சில அரசியற் கட்சிகளினதும் குடிமக்கள் அமைப்புக்களினதும் உழைப்பினால் மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்ட சின்னத்தினைக் கைப்பற்றுவதன் ஊடாக மக்களின் இந்தத் தேசத்திரட்சியைக் கேலிக்குரியதொன்றாக்கியுள்ளதோடு, தொடர்ந்தும் மக்களையும் உழைத்த தரப்புக்களையும் ஏமாற்ற முயலும் மக்களால் புறக்கணிக்கப்பட்ட இந்த தமிழ்த் தேசியப் போலிகளை மக்கள் இனங்கண்டு கொள்ள வேண்டும். இது போன்ற தமிழ்த் தேசியப் போலிகள் மக்களிடையே தமிழர் தேசத் திரட்சியின் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதோடு, கூட்டுவேட்கையினையும், கூட்டு மனோபலத்தையும் தகர்த்தெறிந்து தென்னிலங்கைக் கட்சிகளை நோக்கி மக்களை நகர்த்துவதற்கு தமிழ்த் தேசியத்தின் பெயரால் முயன்று கொண்டிருக்கின்றன.

சில தமிழ்த் தேசியப் போலிகள் அரச தலைவர் தேர்தலில் ஒரு பக்கம் தென்னிலங்கைக் கட்சிகளுடன் இருட்டு ஒப்பந்தமும், மறுபக்கம் தமிழ் மக்களின் வாக்குகளிற்காக பொதுக் கட்டமைப்பின் வேட்பாளர் தரப்புடன் இணைந்து ஒப்பந்தமும் செய்துகொண்டிருந்தமையினையும் யாரும் அறியாமலில்லை. அதற்காக உழைக்காத தரப்புக்கள் அரசியல் சூழ்ச்சிகளினால் இன்று தமிழ் வேட்பாளரின் சின்னத்தைக் கைப்பற்றுவதனூடாக நாடாளுமன்றத் தேர்தலில் மக்களாணை பெறக் பகற்கனவு காணுகின்றன. பொதுக் கட்டமைப்பு வேட்பாளரின் சின்னம் தற்பொழுது அவரை நிறுத்திய தரப்புக்களுடையதல்ல, வேறு கட்சிகளினுடையது என்பதனை அனைவரிடமும் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டும்.

### மேலேழுட்டும் தமிழர் தேசம்

தமிழ் மக்கள் கடந்த 15 ஆண்டுகளாக அரசியல் மயப்படுத்தப்படாமையும் தேசமாய் அணி திரட்டப்படாமையுமே அனைத்துத் தளங்களிலும் பலவீனப்பட்ட மக்களாய்ப் போகக் காரணம். தமிழ் மக்களின் அரசியல் தனியே அடையாளத்திற்கானதன்று; அது இறைமைக்கானது. தமிழ்த் தேசியம் என்பது வாழ்க்கை முறை, அதனை தேர்தல் கால வெற்றுக் கோசமாக மாற்றியமைத்தது சிங்கள - பௌத்த நிகழ்ச்சி நிரலிற்கு துணை போன தமிழ் அரசியற் கட்சிகளே!

நாங்கள் எமது தாயகத்தின் இயற்கை வளங்களைப் பாதுகாத்து சுற்றுச்சூழல் சமநிலையைப்பேணுதல் மற்றும் பொருண்மிய வளங்களை ஒன்று திரட்டி தற்சார்புப் பொருளாதாரத்தை முன்னெடுக்காமையும், ஆதிக்க சக்திகளையும் பகை முரண்களையும் கையாள்வதில் உரிய தந்திரோபாயங்களை வகுக்காமையுமே அவர்களிடமே சரணாகதியடைந்த தமிழ் அரசியலினால் இதுவரைகாலமும் விளைந்ததொன்று.

அகவயமாக முற்போக்கு அம்சங்களைக் கொண்ட புதிய மாறுதல்களிற்குத் தமிழ்த் தேசிய அரசியல் தயாராக வேண்டிய தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்களின் கூட்டு முகவராண்மையைச் சிதைப்பதற்கு தமிழ்த் தேசிய போலிகள் களமிறக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்கள் நாங்கள் அனைவரும் தமிழ்த் தேசிய அரசியற் பண்பாட்டினை அறிவுபூர்வமாக விழிப்புடன் அணுகுவதற்கு முன்வர வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகமாக அனைவரையும் சமூகப்பொறுப்புடன் வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர்
Kalaikkathir

# கருத்துக்கள் பொதிந்த கலைகளின் விழாவே நவராத்திரி !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் ... ஆஸ்திரேலியா

ஒன்பது என்பது எண்களிலும் முக்கியமானது.



ஜோதிடங்களிலும் முக்கியமானது.எண்கணித ஜோதிடத் திலும் இன்றியமையாததாய் இருக்கிறது.இந்த ஒன்பதை நவ என்னும் பெயரினைக் கொடுத்து இராத்திரி யுடன் இணைத்து நவராத்திரி என்றும் அழைக்கின்றோம்.நவராத்திரி என்றாலே ஒன்பது இரவுகள் என் பதையும் எல்லோரும் அறிவோம். நவ - என்றால் இன்னுமொரு கருத்தும் இருக்கிறது. அதாவது புதுமை என் பதையும் கருத்திருத்த வேண்டும். நவநாகரிகம் என்று - புதிய அம்சங்களுடன் வந்தமைந்த நாகரித்தைப் பெயரிட்டு அழைக்கிறோம் என்பதையும் யாவரும் அறிவோம்.புதுமைகள் பல வாழ்வில் தொடர்ந்து வரவே ண்டும் என்னும் எண்ணத்தினால்த்தான் வருடந் தோறும் நவராத்திரியினைப் பக்தி பூர்வமாக அனுஷ்டித்து வருகிறோம் என்றும் எண்ணிடத் வைக்கிறதல்லவா !

நவராத்திரி என்றவுடன் பெண்மைதான் முன்னே வந்து நிற்கும். பெண்மை என்றதும் அங்கு தலைமை தாங் குவது தாய்மைதானே ! தாயினைத் தெய்வமாக வணங்கும் முறை தொன்று தொட்டு சமூகத்தில் இருந்து வருகிறது என்பதை வரலாற்றால் அறிந்து கொள்ளுகிறோம்.எம்மைப் படைத்த ஆண்டவனையே ' அம் மையே ' என்றுதான் அழைத்து ஆராதிக்கின்றோம். மணிவாசகப் பெருமானே ' அம்மையே அப்பா ஒப்பி லாமணியே அன்பினில் விளைந்த ஆரமுதே ' என்று தாயினையே முன்னிறுத்தி அந்தப் பரம்பொருளை விழிக்கின்றார். ' தாயினும் நல்ல தலைவர் என்றடியார் ' என்றும், ' தாயும் நீயே தந்தையும் நீயே ' என்றும். சம்பந்தப் பெருமானும் தாயினை முன்னிறுத்திப் பாடுவதும் நோக்கத்தக்கதே.தமிழ் மூதாட்டி ஔவையார் எத்தனையோ அறிவுரைகள் பகர்ந்தவர். அவர்கூட கொன்றை வேந்தனை ஆரம்பிக்கும் வேளை ' அன்னை யும் ' என்றுதான் முதலடியாகக் கொண்டு ஆரம்பிக்கிறார்.

நாம்வாழும்பூமியைய்தாய்என்கின்றோம். வாழ்வினுக்கு அவசியமான பொறுமையைத் தாய் என்கின் றோம். அனைவரின் அகத்திலும் அமரவேண்டிய கருணையையும் தாய் என்றுதான் சொல்லுகிறோம். ஓடு கின்ற ஆறுகளுக்கும் தாய்மையைக் கொண்ட பெண்களின் பெயர்களையே சூட்டி பெருமைப்படுத்துகிறோ ம் அல்லவா !

உலகிலே யாவராலும் மதிக்கப்படுவதும் , புனிதமாய் கருதப்படுவதும் என்ன வென்று பார்க்குமிடத்து அஃது தாய்மையாய்த்தான் மலர்ந்திருக்கிறது எனலாம். தாய்மைக்கு ஈடாக எதுவுமே இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். எனவேதான் தாய்மையை வழிபாட்டு நிலைக்கு எங்கள் முன்னோ ர்கள் உயர்த்தினார்கள் எனலாம். அந்தத் தாய்மையினை நவராத்திரியுடன் இணைத்து - ஒன்பது இரவுகளை யுமே தாய்த் தெய்வ வழிபாடாக எங்களின் முன்னோர்கள் அமைத்து விட்டார்கள். பெண்மை என்றாலே பெருஞ்சக்தி என்றுதான் போற்றப்படுகிறது. அந்த வகையில் பெருஞ்சக்தியாக உருவெடுக்கும் தெய்வத்து க்கு ஒப்பிட்டுத்தான் சக்தி வழிபாடு என்பதே தொடங்கி இருக்கலாம் என்று கருதமுடிகிறதல்லவா ! அகில த்தின் இயக்கத்துக்கு அந்தச்சக்தியே முதன்மையாய் இருக்கிறது அல்லவா ! அப்படிப்பட்ட சக்தியானது இல்லாவிட்டால் இந்த அகிலத்தின் இயக்கமே அற்றுவிடும் அல்லவா? இந்த அடிப்படையில் சக்தியை மைய மாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டதே பக்தி பூர்வ மான நவராத்திரி விழாவாகும்.

சிவ என்றால் ஏகன் என்பதே அர்த்தமாகும். ஏகம் என்றால் ஒன்று என்றுதானே பொருள்.அதனால்த்தான் சிவனுக்கு உரிய ராத்திரியான சிவராத்திரியை ஒன்றாக்கினார்களோ தெரியவில்லை. நவ என்றால் ஒன் பது. நவசக்திகளைக் குறிக்க நவ ராத்திரியை ஏற்படுத்தியும் இருக்கலாம் அல்லவா ! சக்தி பெரிதா சிவன் பெரிதா என்று எடுத்து வீண் வாதம் மட்டும் செய்து விடவே கூடாது. சக்தி இல்லையேல் சிவம் இல்லை.சிவம் இல்லையேல் சக்தியும் இல்லையே என்றாகிவிடும். இரண்டுமே பிரிக்க முடியா நிலையாகும். இதனால்த் தான் ' மன்னுயிர்கள் சாரத் தருஞ் சக்தி - பின்னமிலான் எங்கள் பிரான்' என்று திருவருட்பயன் காட்டி நிற்கி றது.

வடக்கே காஷ்மீர் தொடக்கம் தெற்கே கன்யாகுமரிவரை , மேற்கே பாஞ்சாலத்திலிருந்து கிழக்கே பர்மா வரை , ஈழத்தில் பல பகுதிகளிலும் நவராத்திரி கொண்டாடப்படுகிறது. சைவர், வைணவர், சாக்தர், காணா பத்தியர், என்று எல்லா மதத்தவர்களுமே நவராத்திரியை அனுஷ்டிக்கிறார்கள் என்பதும் நோக்கத்தக்கதே யாகும். நவராத்திரி எப்பொழு ஆரம்பிக்கப்பட்டது என்று பார்க்கும் பொழுது - பாரத காலம், இராமாயண காலம் என்று நீண்ட காலமாகவே நவராத்திரி கைக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது என்றுதான் அறிய முடி கிறது.

நவராத்திரி என்பது சக்தியை மையப்படுத்திய பூஜையாக இருப்பதால் - இதனைப் பல பெயரில் அழைத்து அனுஷ்டித்து வருவதும் நோக்கத்தக்கது. அம்பாள் எனக் காஷ்மீரிலும், பவானி என ராஜஸ்தானிலும், கல் யாணி என கூர்ஜரத்திலும், உமையென்று மிதிலைப்பகுதியிலும், அழைத்துப் போற்றிப் பரவுகின்றனர். இதனை விடவும் - மீனாட்சி, காமாட்சி, சாமுண்டி, சரஸ்வதி, துர்க்கை, பகவதி என்றும் பெயரிட்டு சக்தியை போற்றி வருவதையும் காணக்கூடியதாகவும் இருக்கிறது.

சக்தியினைப் பரவி நிற்கும் நவராத்திரி என்பது ஒன்றல்ல. நவராத்திரி என்பது வருஷத்தில் நான்கு முறை வருகிறது. மஹா நவராத்திரி என்னும் பெயருடன் தையில் வருகிறது. , வஸந்த நவராத்திரி என்பது பங் குனியில் வருகிறது, ஆனியில் வருவது ஆஷாட நவராத்திரியாய் அமைகிறது. , புரட்டாசியில் வருவது சாரதா நவராத்திரி. இந்த சாரதா நவராத்திரியைத்தான் இந்தியா தொடக்கம் ஈழம்வரை சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள்.இந்தியாவின் வடபகுதியில் 'தசரா ' என்னும் பெயருடன் கலைமகளின் விழா அமைகிறது. நாங்கள் நவராத்திரி விழாவாக எடுக்கின்றோம்.நவராத்திரியின் நிறைவினை விஜயதசமி என்று அழைக்கிறோம்.விஜயதசமியையும் உள்ளடக்கியே வடக்கில் ' தசரா ' என்றார்களோ என்றும் கருதக் கூடியதாக இருக்கிறதல்லவா !

நவம் என்றால் ஒன்பது எண்ணிக்கை என்று பார்த்தோம்.. அது எண்ணிக்கை மட்டுமல்ல - புத்துணர்ச்சி என்னும் கருத்தையும் தாங்கியே நிற்கிறது. கலைகளைப் போற்றி நின்று கொண்டாடும் வழிபாட்டு விழா வாக நவராத்திரி அமைகிறது எனலாம். கலைகளை முன்னிறுத்தி அனுஷ்டிக்கும் பொழுது அங்கு புத்துண ர்வு மேலிடுவது இயல்பான ஒன்றல்லவா ? இதனால் நவராத்திரி புத்துணர்வினை நல்கி புதுத்தெம்பு பெருகி வாழ்வில் மகிழ்வினை நல்கிட உதவும் விரதமாய் , கொண்டாட்டமாய் அமைகிறது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

எங்களின் சமயம் எங்கள் வாழ்வுடன் இணைந்தே வருகிறது. ஆனபடியால்த்தான் வளர்ந்து கொண்டே வரு கிறது. தளர்வுண்டு போகாதிருப்பதற்குக் காரணம் அதன் தொடர் நிலை என்றுதான் என்ண முடிகிறது. அப் படித் தொடர்வதற்குக் காரணம் - நாங்கள் சமயத்தை வாழ்வியல் ஆக்கிக் கொண்டதே முக்கிய நிலை என லாம். கடவுளையே உறவு முறையில் அழைத்து கடவுளுக்கே குடும்பமும் வைத்து வாழ்வியயோடு இணைத்து நிற்கும் சமயத்தை உலகில் எங்குமே காணமுடியாது. அதனால் வாழ்வுக்கு வாழ்வியலுக்கு எவை எல்லாம் இன்றியமையாதனவோ அவற்றையெல்லாம் இறையுடன் இணைத்து அவற்றுக்கு பெருமையும் பெறுமதி யும் காட்டி நிற்பதுதான் எங்கள் சமயத்தின் உன்னதம் எனலாம். கர்த்தர் , கருணாநிதி, பிதா , பிள்ளை, அண்ணல், அரும்பொருள், நாயகன், நடுநிலையாளன், மாண்புடையான், மெய்ப்பொருளானவன் , தலைவன், தோழன்,என்றெல்லாம் அன்பு பாராட்டி அழைக்கின்றார் அந்தப் பரம்பொருளை. ஆனால் இவை எல்லா வற்றுக்கும் மேலாக ' தாய் ' என்று அழைப்பதே சிறப்புடையதாகும் என்று தவசிரேஷ்டர்கள் எண்ணுகிறார் கள்.

தாயிடத்துப் பிள்ளை உரிமையுடன் எதையுமே கேட்கும் நிலை இருக்கிறது. தாயான சக்தியிடம். வாழ்வி னில் செம்மையாக வாழ எவையெல்லாம் எமக்குத் தேவை என்பதைத் காட்டி நிற்பதுதற்கு நவராத்திரி எல்லோருக்கும் வரமாய் வாய்த்திருக்கிறது எனலாம்.

நல்ல நலம் வேண்டும். இவ்வுலகில் வாழுதற்கு நல்ல வளம் வேண்டும். நலமும் வளமும் வாய்த்துவிடுவது மட்டும் முக்கியமல்ல. அத்துடன் தெளிவும் வரவேண்டும். நலமென்னும் என்னும் பொழுது வீரமாகிறது. வளம் என்னும் பொழுது செல்வம் ஆகிறது.தெளிவென்னும் பொழுது கல்வி வந்து அமைகிறது தெளிவைத் தரும் கல்வியையும், வளத்தைத் தரும் செல்வத்தையும், நலத்தைத் தரும் வீரத்தையும் தந்தருளவாய் தாயே என்று மனமுருக வேண்டிப் பிரார்த்தித்து நிற்பதுதான் நவராத்திரியாய் வந்து அமைகிறது. வீரத்துடனும் , செல்வத்துடனும் அறிவு அதாவது கல்வியானது இணைய வேண்டும். அப்படி இணைந்தால்த்தால் வீரமும் செல்வமும் ஒழுங்கான முறையில் பயனை அளிக்கும். அப்படி அமையும் பொழுது அங்கே வெற்றி என்னும் வெளிச்சம் பிரகாசமாய் வந்து நிற்கும். இதுதான் உண்மை. இதுதான் நிச்சயம். இதனை உணர்த்துவதாய் அமைவதுதான் நவராத்திரி. இந்த வெற்றியையே உணர்த்தி நிற்பதைத்தான் விஜயதசமி என்று கொண் டாடி மகிழ்கிறோம்..

சக்தியின் வடிவங்கள் பற்பல.எந்தத் தேவைக்கு என்ன சக்தி தேவையோ அந்தச் சக்தியாய் - தாயாய் விள ங்கும் ஆதிசக்தி வந்து நிற்பாள்.நாட்டின் ஆட்சி அதிகாரத்தை நடத்தும் மந்திரிசபையில் பாதுகாப்பு, கல்வி, நிதி என்பதை நடத்துவதற் கென்று இருபது போல்- ஆதி சக்தியானவளும் உலக இயக்கத்துக்கு இன்றியமை யமையாதனவாகிய வீரம் , செல்வம், கல்விக்கும் பொறுப்பான சக்தியாய் வரு வதை நவராத்திரி விளக்கி நிற்கிறது எனலாம். துர்க்கை எனும் சக்தி வீரத்துக்கும், இலக்குமி எனும் சக்தி செல்வத்துக்கும், சரஸ்வதி எனும் சக்தி கல்விக் குமாய் அமைந்திருக்கிரது என்பது நோக்கத்தக்கதாகும்.

தாய்மை என்பதைப் பெண்மையில்த்தான் காணலாம். பெண்மை என்றால் மென்மை என்றும் பொருள் இருக்கிறது. அந்த மென்மைக்குள்ளே பொறுமையும் இருக்கிறது.மோலோங்கும் சினமும் இருக்கிறது. பெண்மை அடங்கி நிற்கும் பொழுது அங்கு மென்மை மேலோங்கும்.அதே பெண்மை பொங்கிடும் வேளை யாவுமே பொசுங்கிவிடும் வெம்மையே வெளிப்பட்டு நிற்கும்.பெண்மையினை மென்மையாய்த்தான் அணு கவேண்டும். சக்திகளாய் அமைகின்ற - மலை மகளையும், அலைமகளையும், கலைமகளையும், அன்புடன் அணுகினால் வாழ்வினிலே நலமும் வரும், வளமும் வரும் , நல்ல தெளிவும் வரும்.

நல்நலமும், நல்வளமும், நல்லறிவும், ஒன்றாக இணையும் பொழுதுதான் வாழ்க்கையென்பது பூரணமாகி றுது. இதில் ஒன்று குறைந்தாலும் அஃது நிறைவுடைய வாழ்வாக அமையவே மாட்டாது.இவை மூன்றையும் பெற்றிட மனம் மொழி மெய்களால் உருக வேண்டும்.நம்மை மறந்து

காலைக்கதிர் Kalaikkathir

# கருத்துக்கள் பொதிந்த கலைகளின்...

சலனமற்ற அந்தச் சக்தியிடம் சரண டைதல் வேண்டும்.கிடைத்த வளத்தை கீழாக்குவதோ பாழாக் குவதோ பொருத்தமில்லா நிலையாகும்.

இறைவனைக் குறித்து உண்ணாமல் , உறங்காமல், உயிருக்கு வருகின்ற ஊறுகளைப் பாராமல், தவமியற்றி அதன் பயனாக வரத்தால் பல பெற்றிட்ட பலர் – கிடைத்தற்கரிய அத்தனையையும் , தங்களது ஆணவம் என் னும் அகந்தையினால் பொல்லாவழியில் செலுத்து – முடிவில் வரமும் போய் வாழ்வும் அழிந்ததை இதிகாசங் கள் , புராணங்கள் வாயிலாக அறிகின்றோம்.

சுத்தம் என்னும் பதத்தின் முன் அகரம் வந்தால் அது ' அசுத்தம் ' ஆகி விடுகிறது. சுரர் என்னும் பதத்தின் முன் அகரம் வரும்பொழுது ' அசுரர் ' வந்துவிடுகிறார். சுத்தமாய் இருப்பவர் ' சுரர் '. அசுத்தமாய் இருப் பவர் ' அசுரர் ' என்றாகி விடுகிறதல்லவா ! நவராத்திரி பற்றிய சிந்தனையில் இஃது அவசியாமா என்று எண்ணிடத் தோன்றுகிறதா ? இறைவனிடம் வரம்பல பெறுவதற்கு நீண்ட நாட்கள் .... ஏன் வருடக்கணக்கில் தவமியற்றி பெறுதற்கு அரிய பேறுகளை எல்லாம் பெற்றதன் பின்னர் – அத்தனையையும் அறமில்லா வழி யில் செல்லவிட்டு , ஆணவத்தின் உச்சிக்கே சென்று , முடிவில் வரமும் இழந்து , வாழ்வும் முடிந்துபோன நிலையினைப் புராணங்கள் இதிகாசங்கள் காட்டுகின்றன.

சிவ பக்தனானா இராவணன், சிவனிடம் வரம் பெற்ற பத்மாசூரன், சிவனிடம் வரம் பெற்ற சூரபதுமன், ஹம்சன், இரணியன், மகுடாசூரன் என்று இந்தவரிசை நீள்கிறது.வீரம் , செல்வம், கல்வி மூன்றும் வந்தாலும் – அங்கு அகந்தை மட்டும் வந்துவிடக்கூடாது. அறிவுடன் அதாவது நல்லறிவுடன் சேரும் வீரமும் , செல்வமுமே நிலைக்கும்.பயன் அளிக்கும்.பல்கியும் பெருகும்.மாறாக நடப்பின் அத்தனையும் பயனற்றே போய்விடும் என்பதை மனமிருத்த வேண்டும்.அந்த அருமையான தத்துவத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் பக்திபூர்வமான நிலைதான் ' நவராத்திரி ' என்பதையும் அனைவருமே அகமிருத்துவது அவசியமாகும்.

நவராத்திரி என்பது விரதமா அல்லது கலைகளின் விழாவா என்று எண்ணும் பொழுது – விரதத்துடன் இணைந்த கலைவிழாவாகத்தான் நவராத்திரியைப் பார்க்கின்றோம். நவராத்திரி தொடங்கி விட்டாலே – ஆடலுக்கும் , பாடலுக்கும் குறைவே இருக்காது.கலைஞர்கள் அனைவரும் சங்கமிக்கும் விழாவாக நவரா த்திரி அமைவது அனைவருக்கும் பேரானந்தமாகும்.வீட்டிலும் பாட்டு.வெளியிலும் பாட்டு. கல்லூரிகள், கலாசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில்பார்க்கும் இடங்கள், யாவற்றிலும் நவராத்திரி மிகவும் சிறப்பாகக் கலைவிழாவாகவும், பக்தி பூர்வமான சமய நிகழ்வாக அமைவதைக் காணக்கூடியதாக இருக்கும்.அதே வேளை அனைத்து ஆலயங்களிலுமே நவராத்திரி பக்திபூர்வமாய் நடைபெறுவதையும் காணலாம்.

நவராத்திரி என்றதும் மனமெல்லாம் ஒருவித பூரிப்பே ஏற்படும்.ஏனென்றால் கலைகளின் விழாவாக இருப் பதால்.இந்த விழாவில் ' கொலு ' வைப்பது என்பது வீட்டிலும் இருக்கும்.ஆலயங்களிலும் இடம் பெறும். ' கொலு ' என்றால் அழகு என்பதுதான் அர்த்தமாகும்.கொலு என்பது ஆடம்பரத்துக்காக வைக்கப்படுவது அல்ல.கொலு வைப்பதிலும் அர்த்தங்கள் பொதிந்தே இருக்கின்றன என்பதையும் கருத்திருத்தல் அவசி யமேயாகும்.

கொலுவைப்பதிலும் சில நடைமுறைகள் வழக்கில் இருந்தே வருகின்றன. அதாவது ஒற்றைப் படையில் அமையுமாறுதான் கொலுவின் படிகளை அமைத்து வருகிறார்கள்.ஆனால் அவரவர் வசதிக்கு ஏற்பவும் கொலுவினை வைத்து வரு வதையும் காணமுடிகிறது.ஒன்பது படிகளாக வைப்பதை விஷேடம் என்று கருதும் நிலையே பரவலாகக் காணப்படுகிறது.

'ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணாலாகிய பொம்மைகளால் என்னைப் பூஜித்தால் , நான் பூஜிப்போருக்கு சகல சுகங்களையும், சௌகரியங்களையும் அளிப்பேன் ' என்று தேவி பாகவதத்தில் – அம்பாள் கூற்றாக வருவது கொலு வைப்பதற்கு முன்னோடியாக அமைந்திருக்கலாம் அல்லவா !

கொலு மேடையில் கீழிருந்து முதற் படியிலே – ஓரறிவான , புல் , செடி போன்ற வற்றையும் , இரண்டாம் படி யில், ஈரறிவுடைய நத்தை, சங்கு போன்றவற்றையும், மூன்றாவது படியில், மூன்றறிவுடைய கறையான் , எறும்பு போன்றவற்றையும், நான்காம் படியில் நான்கறிவான நண்டு, வண்டு, போன்றவற்றின் பொம்மை களை யும், ஐந்தாம்படியில் ஐந்தறிவான மிருகங்கள், பறவைகளின் பொம்மைகளை வைத்தல் வேண்டும். ஆறாவது படிதான் எங்களுக்கு உரியதாகும்.சிந்திக்கும் அறிவுடைய நிலை மனிதர்களுக்கே இருப்பதால் இந்தப் படியில் மனிதர்களின் பலவகைப் பொம்மைகள் இடம் பெற்றிருக்கும்.ஏழாவது படியானது – மனி தனாய் இருந்தும் உயர்நிலையினை எய்திய ரிஷிகளுக்கு உரியதாய் அமைகிறது.அங்கு ரிஷிகளின் பொம் மைகள் வைக்கப்படும். மனிதருக்கும் ரிஷிகளுக்கும் அப்பால் தேவர்கள் வருகிறார்கள்.எனவே எட்டாம் படியில் தேவர்கள் இடம் பெறுவார்கள். இதில் நவக்கிரகங்கள், அட்டதிக்கு பாலகர்கள், தேவைதைகளின் பொம்மைகள் வைக்கப்படும்.ஒன்பதாம் படிதான் கடவுளருக்கு உரிய இடமாகும்.பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய முப்பெருந் தெய்வங்களும், ஸரஸ்வதி , லக்ஷ்மி, பார்வதி ஆகிய முப்பெருந் தேவியரும், இடம் பெறு வர். நடுநாயகமாய் ஆதிபராசக்தியின் பொம்மை வீற்றிருக்கும்.

வெறும் பொம்மைகளைக் கொண்டதாக கொலு அமைந்து விட்டது என்று எண்ணிவிடக்கூடாது. மனிதன் என்பவன் தன்னுடைய ஆன்மீக சிந்தனைகளை வளர்த்துக் கொண்டே வருகிறான்.அவனின் ஆன்மீகச் சிந்தனை பிரகாசிக்கும் நிலையில் முடிவில் இறைவனுடன் கலக்கவே வேண்டும்.அப்படியான ஒரு தத்து வார்த்தத்தை உணர்த்துவதாகவே நவராத்திரியில் வைக்கப்படும் கொலு காட்டி நிற்கிறது என்பது மனங் கொள்ளத்தக்கதாகும். .

இறை சக்தியால் நாமெல்லாம் இயங்குகிறோம். இறைசக்தியே எமக்கு இயக்க சக்தியாகும். அந்தச் சக் தியே அறிவை செல்வத்தை ஆற்றலை அளிக்கிறது. அந்த அளவிட முடியாத சக்தி அளித்த ஆற்றலை – அந்தச் சக்தியின் ஆசியுடன் வாழ்வில் கையாண்டால் 'வாழ்க்கை வழமாகும். வாழ்க்கை வையத்துள் வசந்த மாக அமையும்.' இப்படி வாழ்வியலோடு சக்தி இணைந்து அமைவது தான் நவராத்திரி விழாவின் கருப்பொருள் எனலாம்.

**மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்!**
**ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப்**
**பாரினிலே!**
**ஏதாயினும் வழிநீ சொல்வாய் எமதுயிரே!**
**வேதாவின் தாயே! மிகப்பணிந்து வாழ்வோமே.**

**வாணி கலைத் தெய்வம் மணிவாக் குதவிடுவாள்**
**ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து**
**மாலையினாள்**
**காணுகின்ற காட்சியாய்க் காண்பதெலாங்**
**காட்டுவதாய்**
**மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே**

**பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி**
**மின்னுநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்**
**அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள்,**
**ஸ்ரீதேவி**
**தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து**
**வாழ்வோமே**




காலைக்கதிர்
Kalaikkathir

## 5000 பெண்கள் பாதிப்பு:

# கொழும்பில் மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு பேரணியும் செயலமர்வும்






நம் நாட்டில் முன்பு 2000 பெண்களுக்கு மார்பக புற்றுநோய் இருந்தது. ஆனால், தற்போது புதிதாக 5000 பெண்களில் மார்பக புற்றுநோய் கண்டறியப்பட்டுள்ளது. ஆண்களுக்கு மார்பக புற்றுநோய் வராது என்று எண்ண வேண்டாம். 100 புற்றுநோயாளர்களில் ஒருவர் ஆண். அத்துடன் இளம் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் வராது என்றும் எண்ண வேண்டாம். இலங்கையில் மார்பக புற்றுநோயால் இறப்பவர்களின் சதவீதம் அதிகரித்துள்ளதாக அதிர்ச்சி தரும் புள்ளிவிவரம் சமீபத்தில் வெளியாகியிருந்தது.




இலங்கையில் வருடாந்தம் 5500 பெண்களும் 125 ஆண்களும் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் இந்த மார்பக புற்றுநோயை கட்டுப்படுத்தும் நோக்கிலும் சர்வதேச மார்பக புற்றுநோய் தினத்தை முன்னிட்டும் கொழும்பில் பாரிய விழிப்புணர்வு பேரணி புதன்கிழமை இடம்பெற்றது.

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் ஆளுநர் ரஜித ரொட்ரிகோ 306 பி1 மாவட்டம் மற்றும் ஏற்பாட்டு ஒருங்கிணைப்பாளர் ரவி சிவகுமார் சர்வதேச குலோபல் திட்ட ஒருங்கிணைப்பாளர் 306 பி1 மாவட்டம் ஆகியோரின் ஏற்பாட்டில் கொழும்பு லங்கா வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், லியோ கழக உறுப்பினர்கள், றோட்டறிக் கழக உறுப்பினர்கள், புற்றுநோய் மருத்துவத்துறையை சார்ந்தவர்கள், பொலிஸார் ஆகியோர் இணைந்து இந்த மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு பேரணியை முன்னெடுத்தனர்.

இந்த பேரணி கொழும்பு பொலிஸ் பார்க் ஊடாக சென்று, கொழும்பு ஹவலக் சிட்டி வணிக வளாகத்தை அடைந்தது.

இதனை தொடர்ந்து கொழும்பு ஹவலக் சிட்டி வணிக வளாகத்தில் மார்பக புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலான செயலமர்வு இடம்பெற்றது.

இந்த செயலமர்வில் கொழும்பு லங்கா வைத்தியசாலையில் இருந்து வருகை தந்த வைத்தியர் காஞ்சனா விஜயசிங்க மார்பக புற்றுநோய் தொடர்பான பல தகவல்களை தெரிவித்தார்.

வைத்தியர் காஞ்சனா விஜயசிங்க மேலும் தெரிவிக்கையில்–

ஏனைய புற்றுநோய்களை விட மார்பக புற்றுநோய்க்கு மட்டும் ஏன் ஒரு மாதத்தை ஒதுக்கி உள்ளார்கள்?

இலங்கையில் பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய் வகைகளில் பிரதானமாக இந்த மார்பக புற்றுநோய் காணப்படுகிறது.

இந்த நோயை முன்கூட்டியே அறிந்துகொண்டால் மிக இலகுவாக குணப்படுத்தக்கூடியவாய்ப்பு உள்ளது. அதனால்தான் ஒரு மாதத்தையே ஒதுக்கி மார்பக புற்றுநோய் தொடர்பாக விழிப்புணர்வு வழங்கி வருகிறோம்.

முன்பு நம் நாட்டில் 2000 பெண்களுக்கு மார்பக புற்றுநோய் இருந்தது. ஆனால், தற்போது புதிதாக 5000 பெண்களில் இந்த மார்பக புற்றுநோய் கண்டறியப்பட்டுள்ளது. 08 பெண்களில் ஒருவருக்கு இந்த மார்பக புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்த நோய்க்கான அறிகுறிகள் சிறியளவில் தென்படும்போதே வைத்தியரை நாடுங்கள். நாங்கள் இந்த அறிகுறிகள் அனைத்தையும் நினைவில் வைத்துக்கொள்ள முடியாது. அதனால் மார்பகங்களில் ஏதேனும் ஒரு மாற்றத்தை நீங்கள் உணர்வீர்கள் என்றால் உடனடியாக வைத்தியரை நாடுங்கள்.

அதன்போது வைத்தியர், இது பிரச்சினைக்குரிய விடயமா, இல்லையா என்பதை தீர்மானிப்பார். பெரும்பாலும் உடற்பயிற்சி செய்தல், தாய்ப்பால் புகட்டுதல் போன்றவை மார்பக புற்றுநோய் ஏற்படுவதை தடுக்க உதவும்.

பெண்களிடம் நாங்கள் இதைப் பற்றி பேசும்போது, அவர்கள் பெரும்பாலும் வைத்தியரை நாட தயங்குவதற்கு காரணமாக கூறுவது, மார்பக புற்றுநோய் வந்ததும் மார்பகங்களை முற்றாக அகற்றிவிடுவார்கள் என்ற பயமே ஆகும்.

ஆனால், இந்த புகைப்படங்களை பாருங்கள். இதில் இருப்பவர் ஓர் இளம் பெண். அவரின் ஒரு பக்க மார்பகம் முற்றாக அகற்றப்பட்டு மீண்டும் சீராக்கப்பட்டுள்ளது. பார்த்தீர்களா? இன்று வைத்தியத்துறை இந்தளவு வளர்ச்சியடைந்துள்ளது.

அடுத்த பயம், கீமோதெரபி வழங்குவதால் முடி உதிர்ந்துவிடும் என்பதாகும். நாங்கள் கீமோ தெரபி வழங்குவது 06 மாதங்கள் மட்டுமே. அதன் பின்னர் 6-7 வருடங்கள் நீங்கள் நன்றாக வாழ்வீர்கள் என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.




ஆண்களுக்கு மார்பக புற்றுநோய் வராது என்று நினைக்க வேண்டாம். 100 புற்றுநோயாளர்களை எடுத்துக்கொண்டால், அவர்களில் ஒருவர் ஆணாகத்தான் இருப்பார். அத்துடன் இளம் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் வராது என்றும் எண்ண வேண்டாம். – என்றார்.

அத்துடன் இந்த செயலமர்வில் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட பெண்ணொருவர் மார்பக புற்றுநோய் வருவதற்கான அறிகுறிகள் மற்றும் தனது அனுபவங்களை பகிர்ந்துகொண்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

முதலில் எனக்கு சிகிச்சை அளித்த வைத்தியர்கள் மற்றும் உதவி செய்தவர்களுக்கு நன்றி . நான் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டு 06 மாதங்கள் ஆகும் போது எனக்கு தலை மயிர் கொட்டியது.

நான் மிகவும் பயந்தேன் . அந்த நேரம் எனக்கு சிகிச்சை அளித்த வைத்தியர்கள் பயப்படாமல் சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்தனர்.

மாதம் ஒரு முறை மாதவிடாயை எதிர்நோக்கும் பெண் எனில், முதல் 7-10 நாள்களில் உங்கள் மார்பகங்களில் நீங்கள் ஏதேனும் வித்தியாசம் காணப்படுகிறதா என பரிசீலனை செய்துகொள்ள வேண்டும்.

குளிக்கும்போது, உடை மாற்றும்போது, நீங்கள் பாதுகாப்பாக உணரும் அனைத்து சந்தர்ப்பங்களின்போதும் நீங்கள் இதனை அவதானித்துக்கொள்ளலாம். குறிப்பாக, மாதவிடாய் காலத்தில் பல சந்தர்ப்பங்களில் நீங்கள் இந்த வித்தியாசத்தை உணரலாம். – என்றார்.

மேலும், இந்த செயலமர்வில் மார்பக புற்றுநோய் தொடர்பில் முக்கியமான சில தகவல்களும் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

மார்பக புற்றுநோய் தொடர்பான மேலதிக தகவல்கள் பின்வருமாறு:

மார்பக புற்றுநோய்க்கான பிரதான அறிகுறிகள்:

1. மார்பகத்தில் கட்டிகள் தோன்றுதல்
2. மார்பகத்தில் வீக்கம் ஏற்படுதல்
3. மார்பகத்தில் அரிப்பு ஏற்படுதல்
4. மார்பகத்தில் இருந்து இரத்தம் கசிதல்
5. மார்பகங்களில் மாற்றங்கள் ஏற்படுதல்
6. மார்பகத்தில் வலி ஏற்படுதல்

உங்கள் மார்பகத்தை கண்ணால் பார்க்கும்போது...

1. இரண்டு மார்பகங்களும் வெள;வேறு அளவுகளில் காணப்படுகின்றனவா என பாருங்கள்

2. கட்டி அல்லது தழும்புகள் இருக்கின்றனவா என பாருங்கள்

3. வீக்கம் இருக்கிறதா என பாருங்கள்

4. சருமத்தில் குழி போன்ற அறிகுறிகள் இருக்கின்றனவா என பாருங்கள்

5. மார்பக காம்புகளில் ஏதேனும் வித்தியாசம் உள்ளதா என பாருங்கள்

6. சிவப்பு நிற தளும்பு இருக்கிறதா என பாருங்கள்

7. தாய்ப்பால் புகட்டும் தாய் எனில் பால் சுரப்பதில் வித்தியாசங்கள், கடினத்தன்மைகள் இருக்கின்றனவா என பாருங்கள்.

உங்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக கீழ்வரும் வைத்திய சேவைகளைபெற்றுக்கொள்ளுங்கள்

1.சுவநாரி சேவை
2.சுவ திவி சேவை
3.புற்றுநோயை முன்கூட்டியே அறியும் சேவைகள்
4.பியயுரு வைத்திய சேவை
5.அறுவைசிகிச்சைநிலையங்கள்

குறிப்பு – மார்பக புற்றுநோய் தொடர்பில் சிகிச்சைபெற்றுக்கொள்ள வைத்தியரிடம்வரும்நோயாளிகளில் 90 சதவீதமானோர் இறுதிக் கட்டத்தில்தான் வருகிறார்கள். இந்த மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டு 5ஆம் நிலையில் இருக்கும் நோயாளர்கள் இறுதிக் கட்டத்தில் வைத்தியர்களை நாடும்போது, அந்த நோயை குணப்படுத்த முடியாத நிலையும் ஏற்படலாம்.

இதனை தெளிவூட்டுவதற்காகவே இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. ஆகையால், மார்பக புற்றுநோயை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து வைத்தியர்களை நாடுவது சிறந்தது.

மாதம் ஒரு முறையேனும் மார்பக புற்றுநோய் தொடர்பில் வைத்தியர்களிடம் ஆலோசனை பெறுவதும் பரிசோதனை செய்து பார்ப்பதும் சிறந்தது என இதன்போது அறிவுறுத்தப்பட்டது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# வடமாகாண போக்குவரத்து குறித்து ஆளுநர் தலைமையில் ஆராய்வு



வடமாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினருக்கும், வடக்கு மாகாண தனியார் போக்குவரத்து சபையினருக்கும் இடையிலான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் அவர்கள் தலைமையில் வியாழக்கிழமை இடம் பெற்றது.

ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், தனியார் போக்குவரத்து சபையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதோடு தனியார் பஸ் நிலையம், பஸ் தரிப்பிடங்களில் காணப்படும் வசதி வாய்ப்புகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் அரச போக்குவரத்து மற்றும் தனியார் போக்குவரத்து சபை இரண்டுக்கும் இடையிலான நேர கட்டுப்பாடுகள், நேர அட்டவணைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

தனியார் போக்குவரத்து சங்கங்களுக்கு இடையில் பின்பற்றப்படும் நடைமுறைகளை புதிதாக சங்கங்களில் இணைந்து கொண்டவர்கள் மீறுவதால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன எனவும் பயணிகள் பல இடையூறுகளை எதிர் நோக்குகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

இதன் போது தனியார் போக்குவரத்துசங்கங்களில்பணி புரிபவர்களின் ஒழுக்கம் மற்றும் அவர்களது ஆடை தொடர்பாக கட்டுப்பாடுகளை நடைமுறை படுத்துதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

பாதைவழித்தட உரிமத்தின் பிரகாரம் பாதை வழித்தடம் சரியாகப் பின்பற்றப்படாமை, நடைமுறைப்படுத்தப்படாமை, தொடர்பாகவும் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. தனியார் பஸ் உரிமையாளர்களின் வாழ்வாதாரம் தொடர்பாக எதிர்கொள்ளும்பிரச்சினைகளும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி விடயங்கள் தொடர்பில் பரிசீலனை மேற்கொண்டு மாகாண வீதி போக்குவரத்து அதிகார சபை இவை தொடர்பான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறும்வடக்குமாகாணதனியார்போக்குவரத்து சபைக்கு இடையிலான தொடர்பையும் சரியாக பேணுமாறும் அவர்களுக்கு உரிய பதிலை விரைவாக வழங்க வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் இவ் விடயங்களை நடைமுறைப்படுத்தும் பொழுது எழும் பிரச்சினைகளை சரியான விதத்தில் ஆராயப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.(05)

# யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 8 சுயேச்சைகள் இதுவரை கட்டுப்பணம்



யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தலுக்கான கட்டுப்பணத்தினை 8 சுயேச்சைக் குழுக்கள் செலுத்தியுள்ளன என யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகரும் பதில் அரசாங்க அதிபருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் நேற்று 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

அதற்கமைய, எதிர்வரும் 11ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்களை சமர்ப்பிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.(05)

# வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுக்களுடன் மன்னார் பேசாலை பகுதியில் பெண் ஒருவர் கைது

மன்னார் பேசாலை பகுதியில் உள்ள கடை ஒன்றிலிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சட்ட விரோதமாகக் கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி வெளிநாட்டு சிகரெட்டுகள் வியாழக்கிழமை மாலை கைப்பற்றப்பட்டுள்ளதுடன் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படை புலனாய்வு பிரிவுக்குக்கிடைத்ததகவலின் அடிப்படையில் மன்னார் விசேடஅதிரடிப்படையினரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது குறித்த சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

30 பெக்கெட் வெளிநாட்டு சிகரெட்டுகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.



கைப்பற்றப்பட்ட பொருள்களும் பெண்ணும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.(05)

# அசிட் தாக்குதலுக்கு இலக்காகியதில் களுத்துறையில் மூன்று பேர் காயம்

களுத்துறை, பண்டாரகமை, குங்கமுவ பிரதேசத்தில் அசிட் தாக்குதலுக்கு இலக்காகி மூன்று பேர் காயமடைந்துள்ளனர் என பண்டாரகமை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

மது போதையிலிருந்த நபரொருவர் வீடொன்றிற்கு முன்பாக நின்றுகொண்டு கூச்சலிட்டுஅக்கம்பக்கத்தில்உள்ளவர்களுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, அவ்வழியாக சென்ற மாமனாரும்மருமகனும்மதுபோதையிலிருந்த நபரிடம் அமைதியாக இருக்குமாறு கூறியுள்ளனர்.

பின்னர், மது போதையிலிருந்த நபர் குறித்த வீட்டிற்குள் சென்று அசிட் நிறைந்த போத்தல் ஒன்றை வெளியே எடுத்து வந்து மாமனார் மற்றும் மருமகன் மீது வீசியுள்ளார்.

இதன்போது,வீதியில்பயணித்தமற்றுமொரு நபரும் அசிட் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

இதனையடுத்து, காயமடைந்த மூவரும் சிகிச்சைக்காக ஹொரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேக நபரை கைது செய்வது தொடர்பில் பண்டாரகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கிராம அலுவலரது இடமாற்றத்தை எதிர்த்து நாவற்காட்டில் போராட்டம்

கிராம உத்தியோகத்தரை இடமாற்ற வேண்டாம்எனக்கோரியாழ்ப்பாணம், வரணி - நாவற்காடு பிரதேச மக்கள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை வியாழக்கிழமை முன்னெடுத்தனர்.

நாவற்காடு - கிராம அலுவலராகக் கந்தசாமி தர்மேந்திரா என்பவர் கடமையாற்றி வந்தார். அவர் நாவற்காடு பிரதேசத்திற்குக் கிராம அலுவலராக நியமனம் பெற்று ஆறு மாதங்கள் பூர்த்தியாகாத நிலையில் அவருக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றத்தை இரத்துசெய்யக்கோரி பிரதேச செயலரைச் சந்தித்திருந்தனர். எனினும் மக்களின் கோரிக்கைக்குப் பிரதேச செயலரால் உரிய தீர்வு வழங்கப்படாத நிலையில் பிரதேச மக்கள் இணைந்து தீர்வு கோரி வியாழக்கிழமை நாவற்காடு பொது மண்டபத்தில் அமைந்துள்ள கிராம அலுவலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.(05)

# சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு போதைக்கு எதிராக கவனவீர்ப்பு போராட்டம்

சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வியாழக்கிழமை வட பிரதேச நல்லொழுக்கசம்மேளனத்தினரின் ஏற்பாட்டில் போதைக்கு எதிரான கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று சங்கானை பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்னால் நடைபெற்றது.

சங்கனையில் புதிதாக ஒரு மதுபானசாலை அமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

குறித்த மதுபானசாலை அமைக்கவுள்ள இடத்திற்கு அருகில் பாடசாலைகள், கல்வி நிலையங்கள், மத ஸ்தலங்கள், குடிமனைகள் காணப்படுகின்றன.

எனவே அந்தப்பகுதியில் மதுபானசாலைக்கு அனுமதி வழங்க வேண்டாம் எனவும் இந்தப் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'மதுசார விலைகளை குறைத்து எமது சமூகத்தை அழிக்க வேண்டாம், போதையற்ற வாழ்வே ஆரோக்கியத்துக்கான வழி, எமது சமூகத்தை அழிக்கும் மது எமக்கு தேவை தானா, முடவனாக விரும்பும் மானிடனே மதுவை கையில் எடுக்காதே, இளைய சமூகமே மதுவை உங்கள் கைகளில் எடுக்காதீர், சிறுவர்களையும் மகளிரையும் மதுவுக்கு




அடிமைப்படுத்தாதே' என கோஷமிட்டு, பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் முடிவில் சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர், சங்கானை பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தினர், வலிகாமம் மேற்கு ஒட்டோ சங்கத்தினர், அந்திரான் தோற்பயிற்சி உற்பத்தி விற்பனை கூட்டுறவு சங்கம், இளைஞர்கள், யுவதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05)





காலைக்கதிர் Kalaikkathir

# யானைகளுக்கு அஞ்சி மரத்தில் வீடு கட்டி வாழும் இளம் குடும்பம்

அநுராதபுரம், மஹாவிலாச்சிய பகுதியில் இளம் குடும்பம் ஒன்று யானைகளுக்கு அஞ்சி மரத்தில் வீடு கட்டி வாழ்ந்து வருகின்றனர்.

இந்தவீட்டில்கணவன், மனைவி மற்றும்இரண்டுபிள்ளைகள்வாழ்ந்து வருகின்றனர்.

இந்த வீட்டின் உரிமையாளர் இது தொடர்பில் தெரிவிக்கையில் –

போதுமான வாழ்வாதாரம் இல்லாத காரணத்தால் நிரந்தர வீடு ஒன்றைக் கட்ட முடியாமல் இவ்வாறு மரத்தில் வீடுகட்டி வாழ்ந்து வருகிறோம்.

பணம் இல்லாத காரணத்தால் அன்றாட வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது.

இந்த வீட்டில் நானும் எனது மனைவியும்இரண்டுபிள்ளைகளும் ஒன்றாக வாழ்ந்து வருகின்றோம். எனது மூத்த மகள் 18 வயதுடையவர் என்பதுடன் இளைய மகன் 5 வயதுடையவர் ஆவார்.

எனதுமூத்தமகள்பாடசாலையில் கல்விகற்று வருகின்றாள். நான் கூலி வேலை செய்து எனது குடும்பத்தை நடத்தி வருகிறேன்.

நாங்கள் இதற்கு முன்னர் இரத்தினபுரி பிரதேசத்தில் உள்ள எமது உறவினர்களுடன் ஒன்றாக வசித்து வந்தோம். பின்னர் உறவினர்களுடன்ஏற்பட்டதனிப்பட்ட தகராறுகாரணமாகமஹாவிலாச்சிய பகுதிக்கு சென்றோம்.

அந்த பகுதியில் வசிக்கும் நபரொருவர்எங்கள்மீதுஇரக்கப்பட்டு காணி ஒன்றை வழங்கினார்.

அந்த காணி விவசாய நடவடிக்கைகளுக்கு சொந்தமானது என தெரிவித்து பிரதேச மக்கள் தகராறில் ஈடுபட்டனர்.

பின்னர், மஹாவிலாச்சிய பிரதேச செயலாளரின் தலையீட்டில் அந்த காணி உத்தியோகபூர்வமாக எங்களுக்கு வழங்கப்பட்டது.



காணியில் அறை ஒன்றை கட்டுவதற்கு அத்திபாரம் இட்டோம். ஆனால் போதுமான பணம் இல்லாத காரணத்தால் அறை கட்டும் பணி இடைநிறுத்தப்பட்டது.

பின்னர், யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக இந்த மரத்தில் வீடு கட்டி வாழ்ந்து வருகின்றோம்.

நாங்கள் பெரிதாக எதுவும் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் வாழ்வதற்கு இரண்டு அறைகள் கட்டிதருமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவித்துள்ளார். (05)

## வடக்கு ஆளுநர் அலுவலக

# பொதுமக்கள் தினம் திங்கட்கிழமைகளில்

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் பொதுமக்கள் தினமாக எதிர்வரும் திங்கட்கிழமை 07 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநருடன் பொதுமக்கள் தங்களுடைய பிரச்சினைகளை நேரடியாக அலுவலக நேரங்களில் கலந்துரையாடுவதற்காக ஏற்கனவே பொது மக்கள் தினமாக இருந்த புதன்கிழமைக்கு பதிலாக திங்கட்கிழமையை பொதுமக்கள் தினமாக மாற்றப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் செயலகத்தால் பொது மக்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

(05)

# குளவிக் கொட்டுக்கு இலக்கான 15 பெண் தொழிலாளர் வைத்தியசாலையில் சேர்ப்பு

தலவாக்கலை, அக்கரபத்தன எல்பியன் தோட்டத்தில் நியூபிரஸ்டன் பிரிவில் குளவி கொட்டுக்கு இலக்கான நிலையில் 15 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வியாழக்கிழமை காலை குறித்த பெண் தோட்டத் தொழிலாளர்கள் தேயிலை கொழுந்து பறித்துக்கொண்டிருந்த போதே திடீரென கலைந்த வந்த குளவிகள் தாக்கியுள்ளன.

காயங்களுக்கு உள்ளான தொழிலாளர்கள் 15 பேரும் மன்றாசி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் 11 பேர் சிகிச்சையின் பின்னர் வைத்தியசாலையிலிருந்து வீடுகளுக்குச் சென்றுள்ளனர் எனவும் எஞ்சிய 4 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (05)



# இருவருக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாட்டில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

ரம்புக்கனை, கப்பல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில்மது அருந்திக்கொண்டிருந்த இருவருக்கு இடையில்ஏற்பட்ட முரண்பாட்டில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்; என ரம்புக்கனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலை சம்பவம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

கொடவெல்லபிரதேசத்தைச்சேர்ந்த39வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

ரம்புக்கனை, கப்பல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இரு நபர்கள் இணைந்து மது அருந்திக்கொண்டிருந்துள்ளனர்.

இதன்போது, இருவருக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு எல்லை மீறியதில் சந்தேக நபர் கொலை செய்யப்பட்ட நபரை கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

பின்னர், காயமடைந்தவர் தலம்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, கொடவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ரம்புக்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வரக்காபொலயில் உள்நாட்டு துப்பாக்கியுடன் தம்பதி கைது

வரக்காபொல அல்கம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் தம்பதி ஒன்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என வரக்காபொல பொலிஸார் தெரிவித்தனர்.

அல்கம பிரதேசத்தில் வசிக்கும் 59 வயதுடைய மனைவியும் 40 வயதுடைய கணவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது-

வரக்காபொல அல்கம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சட்டவிரோத மதுபானம் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக வரக்காபொல பொலிஸாருக்குதகவல்கிடைத்துள்ளது.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த வீட்டிற்குள் மிகவும் சூட்சுமமான முறையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த உள்நாட்டுதுப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சந்தேகநபர்களான தம்பதி வரக்காபொல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)




# வாதுவை கடற்கரையிலிருந்து ஆணின் சடலம் மீட்கப்பட்டது

வாதுவை, பொஹத்தரமுல்ல கடற்கரை பகுதியில் நிர்வாண நிலையில் ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வாதுவை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்த தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

60முதல்65வயதுமதிக்கத்தக்கவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தில் காயங்கள் காணப்படுகின்றன என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைவாதுவைபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கூரையில் இருந்து கீழே விழுந்து நபர் உயிரிழப்பு

கூரையில் இருந்து கீழே விழுந்து நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என மடூல்சீமைபொலிஸார்தெரிவித்தனர்.

34 வயதுடைய தவலம்பெலச வெவேபெத்த மடூல்சீமை பகுதியை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மெட்டிக்காத்தன்ன பகுதி யில் கட்டடம் ஒன்றின் கூரையை புனரமைக்கும் போது தவறுதலாக கூரையில் இருந்து கீழே விழுந்து குறித்த நபர் படுகாயமடைந்த நிலையில் மெட்டிக்காத்தன்ன பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என மடூல்சீமைபொலிஸார்தெரிவித்தனர்.

மேலதிக விசாரணை களை மடூல்சீமைபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.10.2024இல் வெளியிடப்பெற்றது